Reg. M. 2330.

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபோன் னம்பலவன்
ஞானகுரு வாணியைஉள் நாடு.

மலர் கஉ	வெகுதான்யஆண்டு பங்குனித்திங்கள் 1939வரு மார்ச்சுமீ	இதழ் ௩

தியாகராசர் கழிநெடில்

முன்னுரை

சிவபெருமான் கோயில் கொண்டுள்ள சிவதலங்கள் பலவாம். அவை எல்லாம் சிவதலங்களேயாயினும் அங்குக் கோயில் கொண்டிருக்கும் மூர்த்தியின் மகிமையாலும் பாடிய பெரியோரது பெருமையாலும் சில தல்ங்கள் விசேட மதிப் படைகின்றன. அவ்வாறு பெருமை பெற்றவற்றுள் திரு ஆரூரும் ஒன்று.

இந்தத் திப்பிய க்ஷேத்திரத்திற்கு முதலி மூவர்களாய அப்பர், சம்பந்தர், சுந்தரர் பாடிய தேவாரப் பதிகங்களையன்றிச் சேரமான் பெருமாணுயனார் முதலாகச் சிவப்பிரகாசரீறுகப் பல பெரியோர் பாடிய நூல்களுமுண்டு. அவற்றுளீண்டு பதிக்கப்படுவது தியாகராசர் கழிநெடில்.

அ

தியாகராசர் கழிநெடில் பத்துத் திருவிருத்தங்களா லாயது. ஆரூரில் நடைபெறும் ஆதிரை விழா பங்குனி விழாக்களின் சிறப்பைக் கூறுவது; அழகிய நடையினை யுடையது. கமலை ஞானப்பிரகாசர் செய்ததென்ப. அவரது சரித்திரத்தைக் 'கமலை ஞானப்பிரகாசர்' 'ஞானப் பிரகாச மான்மியம்' என்ற நூல்களிற் காண்க.

இலக்கண விளக்க ஆசிரியர் பரம்பரை
திரு. ச. சோமசுந்தர தேசிகன்.

தியாகராசர் கழிநெடில்

தண்ணார் மதியமும் பகீரதியுஞ்
சாந்த மெழுது திருத்தோடுந்
தவிராத் தணிமமும் மாலிகையுந்
தம்பேர் கொடுத்த கரைத்தூசும்
பண்ணார் தவளப் பாளிதமும்
பதும ராகப் பலபணியும்
பசும்பொன் குயிற்று நவரத்னப்
பணிவாங் கதமு மணிச்சிலம்பு
மெண்ணு டரவக் கிண்கிணியு
மிழைத்த சுடர்ப்பூ வாசிகையு
மமைத்த வீர கண்டயமு
மிணங்கு மிடங்க டொறுந்தரித்துக்
கண்ணு ரமுத மயலிருக்கக்
கனக வரியா சனத்திருக்குங்
கருணை நிதியை யாரூரிற்
கண்டார் பிறவி காணூரே. க

இக்கழிநெடில் பன்னிரண்டு சீராலாயது. ஐந்து சீர்க்குமேற் பட்டதெல்லாம் கழிநெடிலாகும்.

“இருமா காய்ச்சீ ரரையடிக்கா யிவையே மற்றை யரையடிக்கும்
வருமா றுணர்க வாரணியுங் கொங்கை பொலியும் மடக்கொடியே”

என்பது **விருத்தப்பாவியல்.**

பொழிப்பு :—குளிர்ச்சி பொருந்திய திங்களையும் கங்கையையும் திருச்சாந்து தடவிய காதணியையும், ஒருபொழுதும் நீக்கமில்லாத தணிபத்தையும் பொன்னரிமாலைகளையும், தம்பேராற் சொல்லப்படும் தூசாகிய தியாகப்பரிவட்டத்தையும், அளவுடன் கூடிய பச்சைக்கர்ப்பூரங்கலந்த சந்தனத்தையும், ஒன்பதுவகை மணிகளும் வைத்து இழைத்த பலவகைப்பட்ட அணிகலன்களையும், பலவகை மணிகளை வைத்துப் பதித்துப் பசிய பொன்னினாலியன்ற பல பணிகளையும், அழகிய சிலம்பினையும், எல்லோராலும் மதிக்கப்படுகின்ற படந்தூக்கியதிற் சிறுமணிபதிக்கப்பட்ட பாம்பினையும், கல்லிழைத்து ஒளிவிடும் பூக்களாலான திருவாசிகையையும், ஒளிவிடுகின்றவீரகண்டயத்தையும் உடையவராய்க் கண்ணிறைந்த அமுதமயமாயிருக்கின்ற உமாதேவி சிவபெருமான் கொடுக்கு மிடமெல்லாம் நிறைந்து பக்கத்தே வீற்றிருக்கப் பொற் சிங்காதனத்தில் எழுந்தருளியிருக்கும் கருணாநிதியை யாரூரின் கண்ணே கண்டு வணங்கியவர்கள் பிறப்பிறப்புக்களை யடையமாட்டார்கள்.

குறிப்புரை :—**சாந்தமெழுது திருத்தோடு** : தியாகப் பெருமானது செவியிலணியும் பூக்களாலாய தோட்டிலே அங்கு அப்பெருமானுக்காக 96 சரக்குகளைச் சேர்த்து வடிக்கப்படும் திருச்சாந்து என்ற நறுஞ்சாந்து பூசுவது மரபு. **தம்பேர்கொடுத்த கரைத்தூசு** : தியாகப்பரிவட்டம். இது நான்கு முழநீட்டமும் ஒருமுழ அகலமுமுடையதாய் இரு ஓரங்களிலும் கறுப்புஞ் சிவப்புங் கலந்த மூப்பட்டைகளையுடையதாகத் தனியே செய்யப்படுவது. **ஆடரவக் கிண்கிணி** : தியாகப் பெருமானது பாதம் படமெடுத்த தலையினையுடைய பாம்பின் மேல் ஊன்றியிருக்கும். அரவத்தில் சிறுமணி கட்டப்பட்டுளது. இது பொன்னாலியன்றது. **சுடர்ப்பூ வாசிகை** : நவரத்தினங்களும் வைத்து இழைக்கப்பட்ட திருவாசி. இன்றும் பெருமானுக்குச் சாத்தப்படுவது. **வீரகண்டயம்** : தியாகப்பெருமானது செங்கோல். இது இருபுறமும் அரியாதனத்தில் வைக்கப்படுவது. இவைகளெல்லாம் தியாகப் பெருமானது சின்னங்கள்.

திங்க ளனவெண் குடைநிழற்றச்
சிங்கா தனத்தி லினிதேறித்
தேவி யிருக்க மகனிற்கச்
செழித்த கவரிப் பணிமாறத்
தங்கத் தகளி விளக்கேந்தித்
தளரு மிடையா ரணிநெருங்கச்
சங்கு படக மெக்காளந்
தாளஞ் சின்னந் துடிமுழவம்
பொங்கு கடலி னொலியடங்கப்
பிறவின் னியங்கள் மழைகாட்டப்
புவன திபர்கள் திசைபோற்றப்
புரைதீர் பருதிக் கடலாடிக்
கங்கு லுதவுந் திருவந்திக்
காப்புக் கண்டு வீற்றிருக்குங்
கருணை நிதியை யாரூரிற்
கண்டார் பிறவி காணாரே: ௨

(பொ - ரை) நிலவையொப்ப வெள்ளைக்குடை நிழலைச்செய்ய சிங்காதனத்தில் உமையம்மையார் பாகத்திலே வீற்றிருக்கவும், முருகனாகிய இளையோன் நடுவில் நிற்கவும் வீற்றிருக்கு மளவிலே, நல்ல சாமரைகள் இருபுறமும் வீசப் பொன்னாலத்தி யெடுத்துத் தேவாடியார் இருபுடையுஞ் சூழ்ந்து நிற்க, வெண்சங்கம், படகம், எக்காளம், முத்துச் சின்னம், சுத்த மத்தளம் இவைகள் கடலொலியை யடக்கி அதற்கும் மேலாக ஒலிக்க, மற்றைய இசைக்கருவிகள் இடிபோலொலிக்க, அட்டதிக்குப் பாலகர்கள் எங்கு நிறைந்து நிற்க, சூரியன் மேலைக்கடலில் மறைவதால் இருளுண்டாகுங் காலத்திலே நடந்தேறுந் திருவந்திக்காப்பு என்னும் விழாவைக்கண்டு அமர்ந்திருக்கும் கருணைக்கடலைத் திருவாரூரிற் கண்ணாரக் கண்டவர்கள் பிறவிக்கடலைக் காணார்கள்.

(கு - ரை) தேவி......நிற்க : தியாகப்பெருமான் சோமாஸ்கந்த மூர்த்தமாகையால், சிவபெருமானும் உமையம்மையுஞ் சேர்ந்

திருக்க நடுவில் கந்தப்பெருமான் நிற்பர். இதுவே ஈண்டுச் சுட்டியது. **சங்கு......யடங்க:** தியாகப்பெருமானது சன்னிதியில் வாசிக்கப்படும் இசைக்கருவிகள் சங்கம் முதலாயவை. மற்றைய நாகசுரம் முரசம் முதலாயவை கோயிலின் வெளியில் வாசிப்பவை. **திருவந்திக்காப்பு:** உலகிலுள்ள கடவுளரனைவரும் அந்திக்காப்புக்குத் திருவாரூர் வருவதாக ஐதீகம். அந்திக்காப்பாயபின் அவர்களை மத்தள்தாளத்தோடு வழியனுப்புவது இன்றும் நடக்கும் வழக்கம். இதனை அப்பரடிகளும்,

"சந்தித்த கோவணத்தர் வெண்ணூன் மார்பர் சங்கரனைக் கண்டீரோ கண்டோ மிந்நாள் - பந்தித்த வெள்விடையைப் பாயவேறிப் படுதலையி லென்கொலோ வேந்திக்கொண்டு - வந்திங்கென் வெள்வளையுந் தாமுமெல்லா **மணியாரூர் நின்றந்திக் கொள்ளக் கொள்ளப்** - பொன்றீ மணிவிளக்குப் பூதம்பற்றப் புலியூர்ச்சிற் றம்பலமே புக்கார்தாமே" என்று எத்தியதூஉமென்க. 2

மோன விரதந் திசைகடோறும்
மொய்த்தோர் பிடிக்க வோவியம்போல்
முத்த நகையார் புடைசூழ
முறையே நந்தி கணம்பரவ
கான நறிய பசுந்தென்றல்
நடக்குந் திருச்சா ளரத்திடையே
நாலு மறையு மொருமூவர்
நாதத் தமிழும் புறத்தமிழும்
யானல் விழியார் சங்கீதப்
பாட்டும் மற்று மணியாழும்
பலதந் திரிகொள் வீணைமுதற்
பஞ்சக் கருவி கஞ்சமுறக்
கான மழலை தவழ்ந்துகுழைக்
காது நிறைய வீற்றிருக்குங்
கருணை நிதியை யாரூரிற்
கண்டார் பிறவி காணாரே. ௩

(பொ - ரை) எங்கும் நெருங்கிய அன்பர்கள் மவுன விரதங் கைக்கொண்டு நிற்க, முத்துக்களைப்போன்ற பற்களையுடைய அடியார் பதுமைகளைப்போல பக்கத்திலே நிறைய, நந்தியம்பெருமான் முதலாய கணநாதர் எத்த, நறுமணத்தையுடைய இளந்தென்றல் வீசுகின்ற திருச்சாளரத்தின் வழியே வேத ஒலியும், ஒப்பற்ற பெரியோரான மூவரது தேவாரமும் மற்றைய பாடல்களும் பதியிலாரது சங்கீதப் பாட்டும் யாழ் வீணை முதலாய நரப்புக்கருவிகளினின்று எழும் ஒலியும் இவைகளெல்லாம் மெல்லவந்து காதில் விழ, அவற்றைக் கேட்டுக்கொண்டிருக்கும் கருணைச் செல்வமான தியாகப் பெருமானை ஆரூரிலே தரிசித்தவர்கள் பிறப்பிறப்பினை யடைய மாட்டார்கள்.

(கு - ரை) **திருச்சாளரம்:** தியாகப் பெருமான் எழுந்தருளியிருக்குமிடத்திலே தென்புறமாகச் சாளரமுண்டு. அதனைத் திருச் **சாளர** மென்பர். திருவந்திக்காப்பின்போது பானல்விழியார் சங்கீதப் பாட்டு இன்றும் நடைபெறுகிறது. பாபவிநாச முதலியார் பாடிய பதங்கள் முதலாயவை பாடப்படுகின்றன. ஆரூர்க்குரிய விசேடங்களில் **திருச்சாளரம்** ஒன்றென்பதனை,

> சங்குதீர்த் தந்**திருச் சாளர**வா யின்வீர
> சிங்கா தனந்திருவந் திக்காப்பு—பங்குனிமா
> தத்திருநா டீர்த்தந் திருவிஞ் தன்கோயில்
> உத்தரபா தந்திருவா ரூர்.

என்ற **காளமேகப்** புலவரது வெண்பா வலியுறுத்தும். 3

> விதித்த நாளில் வருந்தேவர்
> மிடைந்த திருக்கா வணத்தினின்று
> வேளை தெரிய வேத்திரக்கை
> மேலோ ரருளிப் பாடென்ன
> பதித்த மணிமா ளிகைமுன்றிற்
> பாவி நெருங்கு மவரவர்க்கு
> பணித்த முறையே முடித்தாசும்
> பழுக்கா யிலையும் மடிநீட்டி

மதித்த வகத்து ளடியாரும்
புறத்து வடியா ரும்மருவ
வாழுங் கோயின் முதன்மையரு
மற்று ளோரும் புடைசூழக்
கதித்த வீர சோழியத்திற்
கவரி யசைய வீற்றிருக்குங்
கருணை நிதியை யாரூரிற்
கண்டார் பிறவி காணாரே. சு

(பொ - ரை) குறித்தகாலத்தில் வந்த தேவரெல்லாம் திருவுலாக் காட்சி கண்டபின்னர் விடைபெற்றேகத் தேவாசிரியனுந் திருக்காவணத்தில் நெருங்கி நின்று எம்பெருமானது திருநோக்கை எதிர்பார்த்திருக்க, நந்தி யெம்பெருமான் அருளிப்பாடுக வென்ற மாத்திரையானே, நவரத்னங்களுங் குயிற்றப்பெற்ற அக்காவணத்தின்கண்ணே அடிவணங்கி நிற்குமவரவர் தகுதிக்கேற்பக் கட்டளைப்படி தலைப்பரிவட்டமும் தாம்பூலப் பட்டியும் கொடுத்துப் பின் அகப்பரிசாரகரும் புறப்பரிசாரகரும் கோயிலதிகாரிகளும் பரிசனமுஞ் சூழ்ந்துவர **வீரசோழியம்** என்னும் அரியாசனத்திற் சாமரையிரட்ட எழுந்தருளியிருக்குங் கருணைக்கடலை ஆரூரின்கண்ணே கண்டவர்கள் பிறவியை யடையமாட்டார்கள்.

(கு - ரை) விதித்த......மடிநீட்டி: ஆரூரின்கண்ணே நடக்கும் பங்குனித் திருவிழாவிலே கொடியேற்றுவிழா நடந்தவுடன் எம்பெருமான் வேற்றூரிலுள்ளோர்க்கு நந்தியெம்பெருமானைக்கொண்டு நிருபம் வரைந்தனுப்புவது மரபு. '......நாம் திருவுலாப் போகின்றமையாலே பரிகல பரிச்சின்னங்களோடு வரவும்; தாமும் வரவும்' என்பது நிருபம். இது வடமொழியிலும் தமிழிலும் வரையப்படும். அவ்வாறு வந்த நாயன்மார்க்கும் கடவுளர்க்கும் தரிசனந் தந்தபின் **அனுப்பு** என்ற மரியாதை செய்யப்படுவது ஈண்டு சுட்டப்பட்டது. **கோயின் முதன்மையர்:** பெரியமடத்துத் தம்பிரான், மகாநந்தி முதலியோர். **வீரசோழியம்:** தியாகப்பெருமான் எழுந்தருளியிருக்கும் இரத்தின சிங்காதனம். வீரராஜேந்திர சோழனால் செய்து வைக்கப்பட்டது போலும்.

பாந்த ளசையப் பாரசையப்
பதினு லுலகு மொருங்கிண்டப்
பரமர் முழுவ மிசைந்தோங்கப்
பலமா மறையும் புகழ்பாட
மாந்த ரரவென் றெடுத்தவொலி
வானம் பிளந்து திசைதூர்க்க
வகுத்த கனக மதிலெனவே
வளைந்த திரைக்குள் வந்தேறித்
தீந்தந் திமிதோந் திமியெனவே
திக்கு நெருங்க வசைந்தாடிச்
செம்பொ னடிக்கா யிரமுதவி
செருக்கி பவனி விளையாடிக்
காந்த மணிமா மண்டபத்திற்
கவரி யசைய வீற்றிருக்கும்
கருணு நிதியை யாரூரிற்
கண்டார் பிறவி காணுரே. ௫

(போ - ரை) ஆதிசேடனசையவும் பூமி அசையவும், அகில லோகங்களும் ஒன்றுபடவும், சிவபெருமானுக்குரிய மத்தளமொலிக்க வேதவொலியும் தேவார திருவாசக வொலியும் மிகுதிப்படவும், பக்தகோடிகளது ஹர ஹர வொலி வானத்தைப்பிளக்க, பொன்மதி லென்று கூறும்படியான திரையினுள்ளே வந்து சிங்காதனத்தில் ஆரோகணித்து, சதிக்குத்தக ஆடி அடிக்காயிரம் பொன் கொடுத்து பவனிகண்டு அழகிய மண்டபத்திலே வீற்றிருக்கும் ஆரூர்ப் பெருமானைக் கண்ணுற் கண்டவர்கள் பிறவியையடைய மாட்டார்கள்.

(கு - ரை) இது தியாகப்பெருமானது அஜபா நடனத்தைக் குறிப்பது. 5

வழுத்த விரவுஞ் சனங்களுக்கு
வரைசூழ் புவனஞ் சிறிதெனவே
வந்து வந்து மணிமாடம்
மறுகு நெற்றி யாடரங்கம்

பழுத்த சோலை யெங்கெங்கும்
பரந்நெருங்கி நின்றபடி
பணியப் பரவப் பங்குனியைப்
பலரும் புகழப் பணையார்ப்ப
அழுத்து மகுட மழைகிழிக்க
வாடுங் கொடிகள் திசையளக்க
அசையு மசையா தெனநடக்க
வாழி புரளுந் தொறுஞ்சேடன்
கழுத்து நெரிய வரும்பெரிய
கனகத் தேரி லுலாப்போதும்
கருணை நிதியை யாரூரிற்
கண்டார் பிறவி காணாரே. ௬

(பொ - ரை) சிவபெருமானைச்சேவித்தற்பொருட்டு வந்துகூடும் மக்களுக்கு இப்பூவுலகு சிறியதாகவே, அம்மக்கள் நெருங்கி வந்து மாடகூடம், திண்ணை, நடனசாலை, சோலை யெங்கெங்குங் கூடி நின்று பங்குனித் திருவிழாவைக் கண்டுகொண்டாட, முரசங்களும் மற்ற இன்னியங்களுமொலிக்க, தேரினது மொட்டு மேகமண்டலத்தை யளாவ, அதனின்றும் ஆடுங்கொடிகள் எட்டுத்திக்கினும் பரவ, அசைகின்றதோ வன்றி அசையாமலிருக்கின்றதோ வென எண்ணுமாறு திருத்தேரின் சக்கரம் புரளுந்தோறும் பூமியைத்தாங்கி நிற்கும் ஆதிசேடனது கழுத்து நெரியும்படியாக உருளும் திருத்தேரில் உலாப்போதும் ஆரூர் எம்பெருமானைக் கண்ணாரக் கண்டவர்கள் பிறவி வேரறுப்பவர்களாவர்.

(கு - ரை) திருவாரூர் திருத்தேர் ஓடும்போது ஓடிவருவதாக ஊன்றிப்பார்த்தாலன்றி அறியமுடியாததாம். 'ஓங்கொலிமாப்பூண்டதோர், ஆழித்தேர் வித்தகனை நான்கண்ட தாரூரே' என்று திருநாவுக்கரையர் பாடியது காண்க. [தேவா. ௪-ந் திருமுறை, சீகாமரம் ௭.]

சுடரு மந்தா கினிச்சடையிற்
சுவறப் பெருமைக் குறுநதியும்
சுழித்து வேணி நனைத்திருக்குந்
தொன்னீர்க் குடைந்து பொருவபோ
லுடைய பஞ்சக் குரோசத்தி
னுள்ளே யடங்காப் பழமலையை
யுருட்டி யினிமாங் கனிகனிந்தே
யூறு மமுதும் பசுந்தேனும்
வடிகொ ளினிய சுவைப்பாலும்
மதுரத் தயிரும் நறுநெய்யும்
வழிபா லிதச்சந் தனச்சேறு
மருவு புனலுங் கலித்தோடிக்
கடல்வாய் மடுப்ப வபிடேகம்
கண்டு கனகா சனத்திருக்கும்
கருணா நிதியை யாரூரிற்
கண்டார் பிறவி காணாரே. ௭

(பொ - ரை) ஒளிவிடுகின்ற சடையில் உட்செல்லுதலாலே பெருமையடைந்திருக்கும் கங்கையானது அச்சடையை நனைத்திருக்கும் பழைமையான நீருக்குத் தோற்றுப் போரிடுவதையொத்து மண்டலாகிருதியான பஞ்சக்குரோச வெல்லைக்குள்ளே தேரைச் செலுத்தி இனிய முப்பழங்களோடு தேனும் பாலும் சந்தனச்சேறும் அபிரிமிதமாக அபிடேகமான அவை கலந்து கடல்புகும் காட்சியைக்கண்டு பொற்சிங்காதனத்தமர்ந்திருக்கும் கருணாநிதியை ஆரூரிற் கண்டவர்கள் பிறவிப்பெருங்கடலை அடையமாட்டார்கள்.

(கு - ரை) திருத்தேரில் திருவுலாப்போந்த பின்னர் எம்பெருமானுக்கு மூன்று முக்கிய அபிடேகங்கள் நடைபெறுகின்றன. முதலில் நடப்பது பிராயச்சித்தாபிடேகம். இது எண்ணெய்க்காப்பு மண்டபமென்னும் இராஜநாராயணமண்டபத்தில் நடப்பது. இரண்டாவது தேவாசிரயனில் நடக்கும் பக்தக்காட்சி பூர்ணாபிடேகம். மூன்றாவது சர்வாபிடேகம். இம்மூன்றிலும் பதினாயிரக்கணக்கான

இளநீர் இருபதினாயிரத்துக்கு மேற்பட்ட பலா வாழை தெங்கு என்ற முக்கனியுடன் கூடிய அமுது, எலுமிச்சம்பழம் எண்ணாயிரம்; அதற்குத்தக்க பால், தேன், சந்தனக்குழம்பு இவைகளை அபிடேகிப்பது வழக்கம். இது இன்றும் நடைபெறும் வழக்கம். 7

பாலுக் கினிய மொழிகாணப்
பரமா னந்தச் சுடர்வீசப்
பகுத்து வகுத்த பல்லுயிருட்
பலமா பரிசு வெளிதோன்ற
நாலுக் கிசைந்த மறைபரவ
நதியு மதியு மிடைததும்ப
நகைசேர் பாடகக்குண் டலந்தவழ
நாத மணிக்கிண் கிணியசைய
மாலுக் குரிய படகியம்ப
மதங்க மஞ்சு முக்குடங்கள்
வட்டத் துடனே யிசைந்தேங்க
மழலை முழவஞ் சதிகாட்டக்
காலுக் கிசைய வசபைநடம்
காட்டிக் கனகா சனத்திருக்கும்
கருணா நிதியை யாரூரிற்
கண்டார் பிறவி காணாரே. அ

(பொ - ரை) பாலினுமினிய மொழியாளான உமையம்மையார் கண்டிருக்க, மிகுந்த ஆனந்தவொளிவீச, அவரவர்வினைக்கீடாகப் பிறந்த பல உயிர்களிலும் முக்தான்மாக்களின் தன்மை வெளிப்பட, இருக்கு, யசுஸ், சாம, அதர்வணமென்ற வேதங்கள் ஓத்தெடுப்ப, கங்காதேவியுஞ் இளம்பிறையும் நடுவினின்று ஆட, ஒளியைக் காலுகின்ற நவமணிகளிழைத்த குண்டலங்கள் காதிலாட, ஒலியினையுடைய பாதகிண்கிணி யாட, திருமால் தனக்குரியதான படகை ஒலிக்க, மதங்கத்தைத் தோற்பிக்கவல்ல முக்குடமென்ற தோற்கருவி தாளத்துடனே அதிர, மழலைச் சொல்லை யொத்த முழவம் சதிக்குத் தக்கவாறு அடிபட, அசபாநடனஞ் செய்து

அரியாசனத்தெழுந்தருளி யிருக்கும் கருணைநிதியை ஆரூரின் கண்ணே தரிசனஞ் செய்தவர்கள் பிறப்பாகிய தொழிலைக் காண மாட்டார்கள்.

(கு - ரை) சிவபெருமான் உமையம்மையார் காண, திருமால் முழவொலிக்க நடமாடுவர் என்பது புராணங்களிற் கண்டது. அசபா நடனம்: திருஆரூர்த் தியாகர்க்குரிய நடனம். இவ்வாறே சப்த விடங்க க்ஷேத்திரங்களுக்கு வெவ்வேறு நடனமுண்டு. 8

பொருநீர்க் கடல்கள் புகுந்தாலும்
போதா தள்ளித் தூவவெனப்
போந்தோர் புற்றின் குடதிசையிற்
பொய்கை படிந்து படிந்தேறி
வருமூ வினையின் வேர்சாய
வந்து வந்து பணிந்தேதம்
மற்றம் போய தேவரெல்லாம்
மகுட மிழைய நெருக்குண்டு
பெருமா நந்தி கணம்புடைக்கும்
பிரம்பி னடிகொண் டயலொதுங்கப்
பேரா னந்த முலகடங்கப்
பெறும்பங் குனியுத் தரநாளில்
கருதா டரவக் கிண்கிணிக்கால்
காட்டி யரியா சனத்திருக்கும்
கருணை நிதியை யாரூரிற்
கண்டார் பிறவி காணாரே. ௯

(பொ - ரை) யாற்றுநீரால் மோதப்படுகின்ற ஏழு கடல்களும் வந்து சேர்ந்தாலும் நீராட வந்துள்ளோர்மேல் அள்ளித் தெளிப்ப தற்கேனும் போதியதாகாது என்று கூறுமாறு வந்து மக்கள் கூடி புற்றிடங் கொண்ட பெம்மானது கோயிலின் மேற்றிசையின் கண்ணே அமைந்துள்ள கமலாலய மென்னுந் தடாகத்திலே நீராடி எழுந்து பிராரப்த சஞ்சித ஆகாமிய வினைகளின் மூலம் தீயுமாறு செய்துகொண்டு பேரானந்தத்தை யடைந்து தேவரெல்லாம் நட

னங் காண நெருங்கும்போது தம்மகுடங்களின் மணிகளுதிரும்படி நந்தியெம்பெருமான் வேத்திரப் படையாற்றுக்க ஒதுங்கி நின்று காணும் பெருமையுடைய பங்குனி யுத்தரநாளில் பாததரிசனங் காட்டி யரியாசனத்திருக்குங் காட்சியைக் கண்டவர்கள் பிறவிவேர் அறுப்பார்கள்.

(கு - ரை) **புற்று :** வன்மீகநாதர். ஈண்டு திருவாரூர்ப் பூங் கோயிலைக் குறிக்கும். **குடதிசையிற் பொய்கை :** கமலாலயம் என்னுந் தீர்த்தம். இது அறுபத்துநான்கு தீர்த்த கட்டங்களையுடையது. **வேத்திரப்படையாற் றுக்க :** 'வந்திறை யடியிற்றாழும் வானவர் மகுடகோடி - பந்தியின் மணிகள் சிந்த வேத்திரப் படையாற்றுக்கி' என்ற பரஞ்சோதியார் வாக்கு நோக்குக. ௯

வாணா ளிருந்து மவனிரங்க
மலரோன் விதியா திளைப்பாற
வகுத்த வகுத்த பல்லுயிரும்
மருவும் பாவக் கதிசேரப்
பூணார் முலையார் பல்லாண்டு
போற்றி யிசைப்பப் பதஞ்சலியும்
புலியும் பசுவும் முனிவருடன்
போந்து பணிந்து பணிந்தேதகச்
சேணா டமரர் புடைசூழச்
சிலையார் திருவா திரைநாளிற்
றிருவா சகப்பூந் தேன்பருகிச்
செந்தா மரைக்கண் ணனுமின்னங்
காணா தரவக் கிண்கிணிக்கால்
காட்டி யரியா சனத்திருக்குங்
கருணா நிதியை யாரூரிற்
கண்டார் பிறவி காணாரே. ௰

(பொ - ரை) ஒருவனுக்கு ஆயுளிருந்தும் அவன் சிவபெருமானது திருவடியை வணங்காது இரங்கி நிற்க, தாமரை மலரிலே வாழ்கின்ற பிரமதேவன் தனது விதித்தற்றொழிலை நிறுத்தி இளைப்

பாறுமாறு பலவான்மாக்களும் பாவங்களை விட்டுப் புண்ணியஞ் செய்து ஈடேற, அணிகலன்களை யணிந்த மடவார் வாழ்த்தெடுப்ப, பதஞ்சலியும் புலிக்கான் முனியும் காமதேனுவும் மற்றைய முனிவர்களுடன் வந்து நெருங்கிப் பணிந்தேகுமாறு, திருவாதிரையிலே திருமாலுங் காணவியலாத திருவடியைக் காட்டி சிங்காதனத்தில் வீற்றிருக்கும் எம்பெருமானைக் கண்டவர்கள் பிறவிநோயின் வேரறுப்பார்கள்.

(கு - ரை) திரு ஆதிரை விழாவின் பெருமையைக் குறித்து ஞானசம்பந்தப் பெருமான் ‘ அப்பரே ! நீர் வருநாளில் திருவாரூர் நிகழ்பெருமை வகுத்துரைப்பீர் ’ என்று கூற, ‘ அருநாமத்தஞ் செழுத்தும் பயில்வாய்மைய வரும் எதிர் அருளிச் செய்தார்: சித்தம் நிலாவுந் தென்திரு ஆரூர் நகராளும் - மைத்தழை கண்டர் ஆதிரை நாளின் மகிழ்செல்வம் - இத்தகைமைத்தென்று என் மொழிகேன் என்றருள் செய்தார் - முத்துவிதான மணிபொற்கவரி மொழிமாலை ’ என்று சேக்கிழாரடிகள் கூறுவர். இதனாலே திருவாதிரைப் பெருமை விளங்கும். இன்றும் திருஆதிரைத் திருநாள் சிறப்புற நடைபெற்று வருகின்றது. 10

முற்றிற்று.

தேவார உரை

[திரு - மா. வே. நெல்லையப்ப பிள்ளை]

திருவாரூர் - பண் - சீகாமரம்

காண்டலே கருத்தாய் நினைந்திருந்தேன் மனம்புகுந்தாய் கழலடி
பூண்டுகொண் டொழிந்தேன் புறம்போயி னலறையோ
ஈண்டுமாடங்க ணீண்டமா ளிகைமே லெழுகொடி வானிளம்மதி
தீண்டி வந்துலவுந் திருவாரூ ரம்மானே.

பதவுரை :—ஈண்டும் மாடங்கள் நீண்ட மாளிகைமேல் எழுகொடி - நெருங்கியிருக்கிற உப்பரிகை வீடுகள்மேலும்

உயர்ந்திருக்கிற பெரிய வீடுகள்மேலும் கட்டப்பட்டிருக்கிற கொடிகள்,

வான் இளமதி தீண்டிவந்து உலவும் - வானிலுள்ள இளந் திங்களைத் தொட்டு அசைந்துகொண்டிருக்கும்,

திருவாரூர் அம்மானே - திருவாரூரில் திருக்கோயில் கொண்டெழுந்தருளி யிருக்கிற தந்தையே,

காண்டலே கருத்தாய் நினைந்திருந்தேன் - அகக் கண்ணினுலுன்னையே காணவேண்டுமென்ற வேட்கை உடையவனாய் நான் எப்பொழுதும் என் மனதிலே நினைந்துகொண்டிருந்தேன்.

மனம் புகுந்தாய் - அங்ஙனம் நான் உன்னை நினைந்து கொண்டிருந்ததால் நான் உன்னை அறியும்வண்ணம் நீ என் மனதிலே தூவெளி ஒளியோடு விளங்கித் தோன்றினாய்.

கழல்அடி பூண்டுகொண்டு ஒழிந்தேன் - அவ்வாறு நீ என் மனதிலே விளங்கித் தோன்றியதால் நான் உன்னுடைய வீரகெண்டைய மணிந்திருக்கிற இரண்டு திருவடிகளையும் என் தலைமேலே விரும்பி வைத்துக்கொண்டு சீவபோதத்தைத் தவிர்ந்தேன்.

புறம் போயினால் அறையோ - அப்படியிருக்க, நீ என் மனதைவிட்டுப் புறம்பே போதல் முறையாகுமோ? (முறையாகாது என்றபடி.)

விளக்கவுரை :—ஈண்டு மாடங்கள் நீண்ட மாளிகை மேல் எழுகொடி வான் இளமதி தீண்டிவந்து உலவும் திருவாரூர் அம்மானே—ஈண்டுதல் - நெருங்குதல், மாடங்கள் - உப்பரிகையுடைய வீடுகள், மாளிகை - செல்வர்கள் குடியிருக்கும் பெரிய வீடுகள். மேல் என்பதை மாடங்கள் என்பதனோடும் மாளிகை என்பதனோடும் தனித்தனி சேர்க்க. முற்காலத்து உலக வழக்கப்படி இருவகை வீடுகளின்பேரிலும் கட்டப்பட்ட கொடிகள் காற்றினால் அசைந்துகொண்டிருந்

தலைத் திருவாரூர் நகருக்கு அழகாக இங்கே கூறப்பட்டிருக்கின்றது.

காண்டலே கருத்தாய் நினைந்திருந்தேன்—இங்கே காண்டல் என்பது அகக்கண்ணினால் காணுதலாகும். மெய்கண்டார் சிவஞானபோதம் ஒன்பதாம் சூத்திரத்தில் "ஞானக் கண்ணினிற் சிந்தைநாடி" என்று உரைத்தலையும், திருநாவுக்கரசு அடிகள் திருவையாற்றுப் பதிகப் பாட்டுக்களின் ஈற்றில், "கண்டேனவர் திருப்பாதம் கண்டறியாதன கண்டேன்" என்று கூறுதலையும் நோக்கினால் காண்டல் என்பது இங்கே அகக்கண்ணாற் காணுதல் என்பது தெளிவாகும். காண்டலே என்பதிலுள்ள ஏகாரம் பிரிநிலை ஏகாரம். ஏனைய நான்கு பொறிகளின் செயலும் அகக்கண்ணினாற் காண்டலின் அடங்குதலின் காண்டலே என்று பிரிநிலை ஏகாரம் கொடுத்து ஓதினார்.

சேக்கிழார் அடிகள் தாம் பாடிய பெரியபுராணம் தடுத்தாட்கொண்டபுராணம் ௧0௬-வது பாட்டில் "ஐந்து போறிவுங் கண்களே கொள்ள" என்று கண்களுக்குப் பிரிநிலை ஏகாரங்கொடுத்து ஓதியதை நோக்குக. கருத்து - வேட்கை, இச்சை. கருத்தாய் - வேட்கையுடையவனாய். காண்டலே கருத்தாய் நினைந்திருந்தேன் என்பதில் நினைதல் அறிவு நிகழ்ச்சியையும், கருத்து வேட்கை நிகழ்ச்சியையும், காண்டல் செயல் நிகழ்ச்சியையும் குறிக்கின்றன. மக்கள்பால் நிகழும் எவ்வகை வாழ்க்கையினும் இம்மூன்று நிகழ்ச்சிகளன்றிப் பிறிதில்லை. அடியார்பால் தங்கள் மனதில் அன்போடு கூடிய இறைவனைப்பற்றிய நினைவு நிகழில் அந்நினைவு இறைவனால் நிறைவேற்றப்படும் என்பது கருத்து. அடிகள் திருஆலவாய்த் திருத்தாண்டகம் அ-வது பாட்டில், "கருத்தறிந்து முடிப்பான்றன்னை" என்று கூறுதல்காண்க.

மனம் புகுந்தாய்—மனம் புகுதல் என்பது மனதில் இறைவன் தூவெளி ஒளியோடு அடிகள் அறியும்படி விளங்கித் தோன்றுதல் ஆகும். இங்ஙனம் ஒளிதோன்றிய அளவுக்கு மலஇருள் நீங்குகின்றது. "இரந்திரந் துருக என்மனத்துள்ளே எழுகின்ற சோதி" என்று மாணிக்கவாசக அடிகள் கோயிற்றிருப்பதிகம் ௬-வது பாட்டில் கூறியிருத்தல் காண்க. தூவெளி ஒளியோடு மனதில் இறைவன் விளங்கித் தோன்றுதலால் மனம் மலஇருளினின்று நீங்கிச் சிவகரணமாய் விளங்கித் தூய்மைபெற்று வியாபகம் அடைகின்றது. இங்ஙனம் வியாபகமடைந்த மனதை உடையவர்களுக்குக் காரண நிலையில் தூவெளியில் ஒடுங்கிய உலகம் மெய்யாகிய சிவமாகத் தோன்றுமேயன்றி, பொய்யாகிய உலகமாகத் தோன்ருது. இக்கருத்தை அடிகள் " சிந்தையுட் சிவமதாஞர் " என்று திருச்செம்பொன்பள்ளிப் பதிகம் ௪-வது பாட்டிலும், "சித்தத்தை யொன்றவைத்தார் சிவமதேநினைய வைத்தார்" என்று திருவையாற்றுப் பதிகம் ௭-வது பாட்டிலும் தெளிவாகக் கூறினர். மனம் புகுதல் - மலஇருள் நீக்கத்தைக் குறிக்கிறது.

கழல்அடி பூண்டுகொண்டு ஒழிந்தேன்—கழல் - தன்னை அடைந்த அடியார்களுக்கெல்லாம் பேரின்பமளிக்கும் வெற்றியைக் குறிக்கிற வீர அணியாகும். அடி என்பது எங்கும் நிறைந்து பேரொளியாய் விளங்கும் அருளாகிய இரண்டு திருவடிகள்.

சிவஞான சித்தியார் கக-ஞ் சூத்திரம் ௭-வது பாட்டை ஓதி அறிக.

அடி பூணுதல் என்பது இரண்டு திருவடிகளையும் அன்புடனே தலைமேலே வைத்து வணங்குதலாகும். அதாவது ஆண்டவனுகிய சிவபெருமானுக்குத் தாம் மீளா அடிமை என்பதை அறிந்து திருவடிகளாகிய வியாபக அருளில் தாம்

வியாப்பியமாய் அடங்கி நிற்றல். இங்ஙனம் அடங்கி நிற்ற லால் சிவபோதம் மேலிட்டு சீவபோதம் ஒழிதலால் ஒழிந் தேன் என்பதற்குமுன் சீவபோதம் என்பதை அவாய்நிலைச் சொல்லாகக்கொண்டு சீவபோதம் ஒழிந்தேன் என்று உரை செய்யப்பட்டது. கழல்அடி பூண்டுகொண்டு ஒழிதலென்பது அருள்ஒளி விளக்கத்தைக் குறிக்கிறது.

புறம்போயினால் அறையோ—புறம்போதல் ஒருகால் மனதில் அருளொளியோடு விளங்கித்தோன்றி ஒருகால் விளங்கித் தோன்றாமல் மறைதலாகும். ஒளி விளங்கித் தோன்றுதல் மலஇருள் நீங்குதலாலும் விளங்கித்தோன் றாமை மல இருள் வந்து பின் மூடுதலாலும் உண்டாகின் றன. நினைப்பும் மறப்பும் அற்று எப்பொழுதும் இறை வனை நினைக்கும் பருவம் வரும்வரை பருவத்துக்குத்தக்க அளவு ஒருவருடைய மனதில் இங்ஙனம் ஒளி விளங்கித் தோன்றுதலும் ஒளி மறைதலும் உண்டாகின்றன. அறை— அறைதல். முதனிலைத் தொழிற்பெயர். அது இங்கே முறை என்னும் பொருள்பட வந்தது. முறையிடு அறைதல்பற்றி நிகழ்தலின் அப்பொருள் வந்தது போலும்.

அடிகள் பாட்டில் கூறியபடி தாம் காண்டலே கருத் தாய் நினைதலும் இறைவன் மனம் புகுதலும் தாம் கழலடி பூண்டுகொண்டு ஒழிதலும் நிகழ்ந்த பின்பு இறைவன் புறம் போகுதல் எங்ஙனம் நிகழுமெனின் கூறுதும். இங்கே கூறப் பட்டபடி நிகழ்ந்த மூன்று நிகழ்ச்சிகளும் முறையே ஒன்றற் கொன்று ஏதுவும் பயனுமாயிருப்பினும் ஒன்று முற்றிய பின் பிறிதொன்று நிகழ்வதில்லை. இவை மூன்று நிகழ்ச்சி களும் உலகச் சிற்றின்பத்தை உவர்த்து வீட்டின்பத்தை அவாவி வீட்டு நெறியிலொழுகும் அடியார்பால் முதற்கண் ஏகதேசமாய்த் தோன்றிப் பின்னர் பெருகிப் பெருகி முடி வில் நிறைவு பெறுகின்றது. இந்தக் கருத்தை மாணிக்க

வாசக அடிகள் திருக்கோத்தும்பிப் பதிகம் ககூ-வது பாட்டில் "என் மனத்தே வள்ளல் வரவர வந்தொழிந்தான்" என்றும் திருவெசறவுப் பதிகம் கூ-வது பாட்டில் "மருவினிய மலர்ப்பாதம் மனத்தில் வளர்ந்து" என்றும் கூறி அருளினார். திருநாவுக்கரசு அடிகளும் தனித்திருநேரிசை எ-வது பாட்டில் வீட்டின்பம் விரும்பித் தவஞ் செய்யும் அடியாருடைய மனதில் இறைவன் ஏகதேச ஒளியோடு விளங்கித் தோன்றுதலை "விள்ளத்தா னொன்று மாட்டேன் விருப்பெனும் வேட்கையாலே - வெள்ளத்தேன் போல நுன்னை வாய்மடுத் துண்டிடாமே - உள்ளத்தே நிற்றியேனும் உயிர்ப்புளே வருதியேனும் - கள்ளத்தே நிற்றியம்மா எங்ஙனம் காணுமாறே" என்று கூறினார்.

இந்தப்பாட்டில் அடிகள் பக்குவம் முதிராத அடியார்கள் தங்கள் மனதில் இறைவன் ஒருகால் அருளொளியாய் விளங்கித் தோன்றிப் பிறிதொருகால் விளங்கித் தோன்றாது மறைதலைக்கண்டு ஊக்கங்குன்றாது தாங்கள் மேற்கொண்ட தவத்தைப் பயன் முற்றுப்பெறச் செய்யும்படி அந்த நிலையைத் தாம் அடைந்திருப்பதாகத் தம்மேல் வைத்து அவர்கள் அறியும்படி உண்மையைக்கூறி அருளினார்.

திருவாசகம்

[மா. வெ. நெல்லையப்ப பிள்ளை]

எச்சம்மறி வேனுனெனக் கிருக்கின்றதை யறியேன்
அச்சோவெங்க ளரனேயரு மருந்தேயென தமுதே
செச்சைமலர் புரைமேனியன் றிருப்பெருந்துறை யுறைவான்
நிச்சம்மென நெஞ்சின்மன்னி யானாகிநின் றானே.

பதவுரை :—திருப்பெருந்துறை உறைவான் - திருப்பெருந்துறையிலே இருக்கின்றவனும்,

செச்சை மலர்புரை மேனியன் - வெட்சிமலர் போலும் சிவந்த திருமேனி உடையவனையும்,

எங்கள் அரனே - (நீ செய்த தீக்ஷையினாலே) எங்கள் மலத்தைக் கெடுத்தவனே,

அருமருந்தே - எனது தன் முனைப்பைக் கெடுத்த அருளாகிய அருமருந்தே,

எனது அமுதே-நான் நுகரும்பேரின்பமாயிருப்பவனே,

நிச்சம் என்நெஞ்சில் மன்னி யாதுகி நின்றானே - அங்ஙனம் நீ திருப்பெருந்துறையில் தீக்ஷை செய்து என்னை ஆண்டருளியதனாலே எப்பொழுதும் என் நெஞ்சில் பிரிப்பின்றி அத்துவிதமாய்க் கலந்து யானாக நிலை பெற்று நிற்கின்றவனே,

நான் எச்சம் அறிவேன் - (இதனாலே அங்ஙனம் சிவபெருமான் என்நெஞ்சில் யானாக நிலைபெற்று நிற்றலினாலே உனக்கு) நான் சுதந்தரமில்லாத சேடனென்று அறிவேன்.

எனக்கு இருக்கின்றதை அறியேன்-என்னை அநாதியே பற்றியுள்ள ஆணவமலத்தினது பிணிப்பை அறியேன்.

அச்சோ - இஃது என்ன வியப்பு.

விளக்கவுரை :— திருப்பெருந்துறை உறைவான் செச்சை மலர்புரைமேனியன்—இதனாலே சிவபெருமான் திருப்பெருந்துறைக்கு அருட்குரவனாய் வந்து தம்மை ஆண்டருளியதை அடிகள் குறிக்கின்றார். சிவபெருமான் சிவந்த நிறமேனியை உடையவனாய்த் திருப்பெருந்துறைக்கு வந்து தமக்குத் தீக்ஷை செய்து தம்மை ஆண்டருளியதை "செந்தாமரைக் காடனைய மேனித் தனிச்சுடரே" என்று கூ0-வது பாட்டில் கூறியிருத்தலுங் காண்க. திருப்பெருந்துறை உறைவான் என்றதனாலே தீக்ஷைசெய்த இடமும் செச்சை மலர்புரை மேனியன் என்றதனாலே தீக்ஷை செய்யவந்த குரவன் கோலமுங் கூறப்பட்டன. திருப்பெருந்

துறை உறைவான் என்பதும் செச்சை மலர்புரை மேனியன் என்பதும் வினையெச்சப் பொருளில் வந்தன.

எங்கள் அரனே—அரன் - பாசத்தை அரிக்கிறவன்- அதாவது ஆணவம் வினை மாயை என்னும் மும்மலங்களையும் அழிக்கிறவன். அடிகள் அடியார்களைச் சேர்த்து எங்கள் அரனே என்று பன்மையில் கூறினர். இதனாலே சிவபெருமானை அடிகள் தமக்கு மல இருள் நீக்கஞ் செய்தவனென்று விளித்துக் கூறினர்.

அருமருந்தே—உயிர்களுக்கு மல இருள் நீங்கினாலும் அருளொளி விளக்கம் இல்லாவிடின் உயிர் முனைப்பு (சீவபோதம்) நீங்காதாதலின் அடிகள் எங்கள் அரனே என்று விளித்த பின் சிவபெருமானைத் தமக்கு அருள் ஒளி விளக்கஞ் செய்த அருமருந்தே என்று விளித்தார். உயிர்களுடைய மல நோய் நீங்குதற்கும் யான் எனது என்னுஞ் செருக்கு இறைவனுடைய அருள் மருந்தாயிருக்கிறது. இங்கே யான் எனது என்னுஞ் செருக்கு நீங்குதற்கு ஏதுவாயுள்ள அருளாகிய மருந்தைச் சிறப்பித்துச் சிவபெருமானை அருமருந்தே என விளித்தார். அடிகள் கூஉஉ-வது பாட்டில் " ஆட்கொண்டு பேரருளால் நோக்கு மருந்து " என்று சிவபெருமானைக்கூறியுதை நோக்குக.

எனது அமுதே—சாவை நீக்கும் அமுதம் என்ற சொல் இங்கே அழியாத பேரின்பத்தைக் குறிக்கிறது. பேரின்பத்தை ஒவ்வோர் உயிரும் தனித்தனியே நுகர்தலால் எனது அமுதே என்று ஒருமையில் கூறினர். எங்கள் அரனே என்றதனாலே மல இருள் நீக்கமும், அருமருந்தே என்றதனாலே அருளொளி விளக்கமும், எனதமுதே என்றதனாலே சிவப்பேறும் அளித்தவன் சிவபெருமான் என்பது கூறப்பட்டது. இவை மூன்றும் முறையே சிவஞானபோதம் கூ, கO, கக-ஞ் சூத்திரங்களில் கூறப்பட்டிருக்கின்றன.

நிச்சம் என நெஞ்சில் மன்னி யானாகி நின்றானே— நிச்சம் - நித்தம் என்பதன் போலி. எப்பொழுதும் நெஞ்சு என்பது இங்கே அருள் ஒளி விளக்கம் பெற்றதினாலே யான் எனது என்னுஞ் செருக்கு நீங்கித் தூய்மை பெற்ற மனம். அருமருந்தே என்பதன் விளக்கவுரையில் கூறியபடி யான் என்னும் தன்முனைப்பு உணர்வு சிறிதுமின்றித் தெளிந்த அறிவு எய்திய அடிகளைச் சிவபெருமான் தனது திருவடி வியாபகத்துள் அடக்கித் தானென அடிகளாகிய உயிரெனப் பிரித்தறிய வாராத அத்துவித நிலையில் முழுதுந்தானே யென அடிகளை உணரச்செய்தல் பற்றி அடிகள் யானாகி நின்றானே என்றார். "நானெனவொன் - றில்லென்று தானேயெனு மவனைத் தன்னடிவைத் - தில்லென்றுதானு மிறை" என்று சிவஞானபோதம் க௦-ஞ் சூத்திரங் கூறுதல் காண்க. இந்த நிலையில் கால அளவைக் கடந்து எப்பொழுதும் உள்ளதாதலும் பேரா இயற்கைத்தாதலும் இருத்தல் பற்றி நிச்சம் என நெஞ்சில் மன்னி யானாகி நின்றானே என்றார். தெளிவுபற்றி நின்றானே என இறந்த காலத்தால் கூறப்பட்டது.

நான் எச்சம் அறிவேன்—எச்சம் என்ற தமிழ்ச்சொல் யாதாமொரு முழுப்பொருளில் அதற்குப் பாகமாயுள்ள ஒரு குறையைக் குறிக்கிறது. வடமொழியில் இதுசேடமென்று குறிக்கப்படுகிறது. உயிர் சிவபெருமானோடு நீரை அடைந்த உப்பைப்போல இரண்டறக் கலந்த அத்துவித நிலையில் சிவபெருமான் சேடியப் பொருளாயும் உயிர் சேடப்பொருளாயும் உள்ளன. அடிகள் சிவபெருமானோ டத்துவிதமாய்க் கலந்து தமக்கென ஒரு சுதந்தரமின்றி அவனுடைய திருவடி வியாபகத்துளடங்கிநின்று தம்மைச் சிவபெருமானுக்குச் சேடப்பொருளென்று உணர்தலின் நான் எச்சம் அறிவேன் என்றார். "யாதொன்று யாதொன்றன் பொருட்டேயாய்த்

தனக்கெனச் சுதந்தரமின்றி நிற்கும் அஃது அதற்குச் சேடப்பொருள்'' என்று சிவஞான சுவாமிகள் சிவஞான பாடியம் பக்கம் ருOO-ல் கூறியருளினர். இதனை மெய் கண்ட தேவர் கக-வது சூத்திர வெண்பாவில் "நசித்துமல-மப்பணைந்த வுப்பினுள மணைந்து சேடமாம்'' என்று கூறி யிருத்தல் காண்க. அடிகள் தாம் சிவபெருமானுக்குச் சேட ஞகிய அடிமை என்று அறியும் அத்துவித நிலை ஆணவமலம் முழுவதும் நசித்தலாலுண்டாகிறது. நான் அறிவேன் என்ற தனுலே அடிகள் பொருட்டன்மையால் (Individuality) சிவபெருமானுக்கு வேருயிருந்து, பேரின்பம் நுகர்தல் குறிப்பிடப்பட்டது.

எனக்கு இருக்கின்றதை அறியேன்—என்பது இங்கே ஆணவமலப் பிணிப்பைக் கூறுகின்றது. ஆணவமலப் பிணிப்பை நசித்தலாலேயே எச்சமறிவேனென்று சொன்ன அடிகள் தாம் அறியாமலிருப்பது ஆணவமலப் பிணிப்பு என்பது தெளிவு. அத்துவித நிலையில் ஆணவமலப் பிணிப்பு நீங்குமேயன்றி என்றுமுள்ள ஆணவமலம் நீங்காதாதலின் எனக்கு இருக்கின்றது என்று முக்காலத்தையுங் குறிக்கும் நிகழ் காலத்தால் கூறினர். "முத்திதனின் மூன்று முதலு மொழியக்கேள்'' என்று உண்மை விளக்கம் ருO-வது பாட் டில் மனவாசகங்கடந்த தேவநாயனர் கூறியிருத்தல் காண்க.

அச்சோ—என்னும் இடைச்சொல் வியப்பைக் குறிக் கிறது. அடிகள் தாம் சிவபெருமானுல் ஆட்கொள்ளப்பெற்ற பின்பு அடைந்த நிலையை அதற்கு முன்னுள்ள நிலையோடு ஒத் துப்பார்த்து வியப்பு அடைகின்ருர். அடிகள் அச்சோப்பதி கம் முதலாவது பாட்டில்,

"முத்திநெறி யறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்
பத்திநெறி யறிவித்துப் பழவினைகள் பாறும்வண்ணஞ்

சித்தமல மறுவித்துச் சிவமாக்கி எனையாண்ட
அத்தனெனக் கருளியவா றார்பெறுவா ரச்சோவே"

என்று கூறியருளினார்.

இந்தப் பாட்டில் அடிகள் தமக்குச் சிவபெருமான் அருட்குரவனாய்த் திருப்பெருந்துறைக்கு வந்து தீக்கை செய்து மல இருளை நீக்கியும் அருளொளியை விளக்கியும் சிவப்பேறு அளித்ததையும் சிவப்பேற்றின் பயனாகத் தாம் அவனுக்குச் சேடனாகிய அடிமையாய்ப் பேரின்பம் நுகர்ந்து கொண்டிருத்தலையும் கூறுகின்றார்.

பொய்யடிமையில்லாத புலவர்

இரண்டாவது பகுதி

[மா. வெ. நெல்லையப்ப பிள்ளை]

சிவஞான போதநூலில் காரணநிலையிலுள்ள உலகம் மெய் (சத்து) என்று கூறிய மெய்கண்டதேவர் காரிய உலகமும் ஒருவாற்றால் மெய் என்று கூறுகின்றாரே, அது எவ்வாறு பொருந்துமெனிற் கூறுதும்:

காரணநிலையிலுள்ள உலகமானது இறைவனது தூவெளி (ஞானாகாசம்) அருள் ஒளியால் நிறைந்துள்ளதுபற்றி, என்றும் அழியாது ஒரு தன்மைத்தாயுள்ள மெய் (Reality) என்று கூறப்படுகிறது. காரியநிலையிலுள்ள உலகம் மல இருளால் மூடப்பட்டு அடிக்கடி நிலைமாறுதல் பற்றிப் பொய் (அசத்து (unreality) என்று கூறப்படுகிறது. ஆயினும் அவ்வுலகமும் தூவெளி அருள் ஒளியாலும் நிறைந்துள்ளது (The divine life and light pervade the whole world) காரிய நிலையிலுள்ள உலகமானது தூவெளி அரு

ளொளியால் விரவப்படாதாயின் ஒரு கணத்திலுங்கூட நிலைத்து நில்லாது.

> " அண்ட மாரிரு ளூடு கடந்தும்பர்
> உண்டு போலும் ஒரொண்சுட ரச்சுடர்
> கண்டிங் காரறி வாரறி வாரெலாம்
> வெண்டிங் கட்கண்ணி வேதிய னென்பரே "

என்று திருநாவுக்கரசு அடிகள் அருளிய தேவாரத்தினால் இவ்வுண்மை நன்கு விளங்கும்.

ஒருபொருளே சூக்குமமான சத்திரூபமாய் விளங்கும் போது மெய் என்றும், அழியுந்தன்மைக்கேதுவாய்த் தூலமாய் விளங்கிக் காட்சிப் புலனாகும் பொழுது பொய் என்றும் கூறப்படும். காட்சிப்புலனுக்கு விளங்கித் தோன்றும் பொய் அவ்வாறு விளங்கித் தோன்றாத சூக்குமமாய மெய்யில் அடங்கியுள்ளது. அன்றிப் பொய் மெய்யினின்றும் வேறல்ல. மேலும் பொய்யென்பது மெய்க்கு மறுதலையன்று. காரிய உலகத்தில் நிரவியுள்ள அருளொளியானது மல இருளுடையார் புறக்கண்ணுக்குப் புலப்படாமல் அருளுடையார் அகக்கண்ணுக்குப் புலப்படுவதாயுள்ளது. இவ்வுண்மையை மெய்கண்டதேவர், சிவஞானபோதம் கக-வது சூத்திரத்தில், " அருக்கனேர் நிற்பினு மல்லிருளே காணார்க் கிருட்கண்ணே பாசத்தார்க்கீச - னருட்கண்ணாற் பாசத்தை நீக்கும் பகலலர்த்துந் தாமரைபோ-னேசத்திற் றன்னுணர்ந் தார்நேர் " என்று கூறியருளினார். இங்ஙனம் காரிய உலகமானது மல இருளோடு அருளொளியுடனும் நிறைந்து கலந்திருத்தலால் ஒருவாற்றால் மெய் என்று கூறப்படுகிறது.

ஒன்றைச்சார்தலும் சார்ந்ததன் வண்ணமாதலும் உள்ள பண்புடைய மக்கள் கட்டு நிலையில் காரிய உலகத்தைச் சார்ந்து அதன் வண்ணமாய் மலப்பற்றுடையவர்களாயிருக்கும்பொழுது பொய் என்று கூறப்படுகிறார்கள். அவர்

கள் இறைவனைச் சார்ந்து காரிய உலக மலக்கட்டிலி ருந்து நீங்கி அருள் வயப்பட்டு இருக்கும் பொழுது மெய் என்று கூறப்படுகின்றார்கள். இதனாலே ஆன்மா மெய்பொய் (சதசத்து) என்று கூறப்படுகிறது. மலக் கட்டு உடையவர்களுக்குப் பொய்யாகிய காரிய உலகம் மெய்யாகவும், மெய்யாகிய சிவம் பொய்யாகவும் புலப்படு கின்றன. மலக்கட்டு நீங்கினவர்களுக்குப் பொய்யாகிய காரிய உலகம் பொய்யாகவும், மெய்யாகிய சிவம் மெய்யாகவும் உண்மையில் உள்ளபடி புலப்படும். அவர்களுக்குக் காரிய உலகத்தில் நிறைந்திருக்கிற இறைவனது அருளொளி மாத் திரம் புலப்படுதலால் அதனையும் சிவனுடைய திருமேனி யாகவே காண்பார்கள். அவர்கள் அதனையே சிவமாகக் காண்பார்களேயன்றி நம்மனோர்போலக் காரிய உலகமாகக் காணமாட்டார்கள். திருநாவுக்கரசு அடிகள், "யாதுஞ்சுவடு படாமல் ஐயாறடைகின்ற போது காதல் மடப்பிடியோடும் களிறு வருவன கண்டேன் - கண்டேனவர் திருப்பாதம் கண்டறியாதன கண்டேன்," என்று திருவையாற்றுப்பதி கம் க-வது பாட்டில் கூறுமாற்றால் இவ்வுண்மை அறியப் படும்.

ஒன்றனைச் சார்ந்து நிற்கும் இயல்புடைய மக்கள் காரிய உலகத்துக்காவது, சிவத்துக்காவது அடிமைப்பட்டே இருத்தல் வேண்டும். ஒன்றிற்கும் அடிமைப்படாதிருக்கும் நிலை அவர்களுக்குக் கிடையாது. அவர்கள் காரிய உலகத் துக்கு அடிமைப்பட்டால் சிவத்துக்கு அடிமைப்படமாட் டார்கள். மலக்கட்டிலிருந்து நீங்கினவர்கள் சிவத்துக்கு அடிமைப்பட்டிருத்தலால் காரிய உலகத்துக்கு அடிமைப்பட் டிருத்தல் முடியாது. மக்கள் காரிய உலகப்பொருள்களுக்கு அடிமைப்பட்டுத் தங்கள் அறிவு, வேட்கை, செயல்களை அறத்தின் வழி நிகழ்த்தி ஒழுகினால் சுட்டறிவும், அவ்வறி

விளைவாகும் சிற்றின்பமு மடைவார்கள். அறம் என்பது காரிய உலகில் சிற்றின்பப் பயன்கருதி அருளின் வழி ஒழுகும் முறைமையாகும். அவர்கள் சிவத்துக்கு அடிமைப் பட்டுக் காரிய உலகில் தங்கள் அறிவு, வேட்கை, செயல் களைப் பயன்கருதாது நிகழ்த்தி அருள் வழி ஒழுகினால் பேரறிவு (மெய்யறிவு)ம் அதனால் விளையும் பேரின்பமும் அடைவார்கள். காரிய உலகத்துக்கு அடிமைப்பட்டவர்கள் மன்னராயிருப்பினும் பிறர் வயப்பட்டு அதனால் அச்சமும் துன்பமும் அடைவார்கள். சிவமாகிய மெய்க்கு அடிமைப் பட்டவர்கள் தங்கள் வயப்பட்டவர்களாய், பிறர் எவருக்கும் அஞ்சாதவர்களாய், எதனையும் விரும்பி வேண்டாத தீரர் களாய் இருப்பார்கள். இக்கருத்தைத் திருநாவுக்கரசு அடிகள்,

"வானந் துளங்கிலென் மண்கம்ப மாகிலென் மால்வரையும்
தானந் துளங்கித் தலைதடு மாறிலென் தண்கடலும்
மீனம் படிலென் விரிசுடர் வீழிலென் வேலைநஞ்சுண்
டோமொன் றில்லா ஒருவனுக் காட்பட்ட உத்தமர்க்கே"

என்று தனித்திருவிருத்தம் தேவாரம் அ-வது பாட்டில்கூறி யருளினார். மக்கள் பயன்கருதாது தங்கள் அறிவு, வேட்கை, செயல்களை நிகழ்த்தி அருள்வழி ஒழுகுதலின்றிப் பயன் குறித்து எத்துணை நல்வினை செய்யினும் மெய்யறிவு அடைந்து பிறப்பிறப்புக்களினின்றும் நீங்கமாட்டார்கள். இந்தச் சைவசமய உண்மையை அறிந்து நமது நாட்டிலுள்ள வர்கள் உயிர் பொதுநலப்பணி செய்வார்களானால் அப்பணி யானது அவர்களுக்குப் பேரின்பத்துக்கு வழியாயிருக்கிற மெய்யறிவைக் கொடுப்பதன்றி நாடு திருந்தி முன்னேற்ற மடைவதற்கும் காரணமாயிருக்கும்.

மெய்ப்பொருளாயுள்ள இறைவன் ஒருவனே தன்வய முடையவன். அவனைச் சாராத உயிர்களெல்லாம் தன்வய மில்லாதவைகள். உயிர்கள் எல்லாம் இறைவனுக்கு அடிமை

என்பது அவைகள் தன்வயமில்லாது இறைவன் வயப்பட்டிருக்கும் தன்மையைக் குறிக்கிறது. இறைவன் வயப்பட்டிருக்கும் மக்களே தன்வயமுடையவர்களாவார்கள். வினையோர் பிறர்வயப்பட்டு அதனால் அச்சமும் துன்பமும் அடைவார்கள். உலகப் பற்றுடைய மக்களும் இறைவன் வழிப்படுத்தும் எல்லைக் குட்பட்டல்லது தன்வயமுடையவர்களாதல் முடியாது. இறைவன் வயப்பட்டிருந்தால் மட்டும் அறிவு வலியும், வேட்கை வலியும், செயல்வலியும் உடையவர்களாய்த் தங்கள் அறிவு வேட்கை செயல்களை உயிர் பொது நலப்பணியின் பொருட்டுச் செலுத்திப் பொதுநன்மை செய்யத் தகுதியுடையவர்களாயிருக்கிறார்கள். இக்காலத்திலுள்ள பல நாட்டு அரசியல் முதன்மையாளரும், இறைவன் வயப்பட்டு அவன் அருள்வழி நில்லாது, தங்கள் வயப்பட்டு நின்று பணிசெய்தலாலே ஒருவருக்கொருவர் இணக்கமின்றிப் பிணக்குடன் ஒழுகி, உலகமெங்கும் அமைதிக்குறைவும் கலகமும் போரும் உண்டாதற்குக் காரணராயிருக்கின்றார்கள். நமது நாட்டில் நடைபெறும் அரசியல் பணி உள்ளிட்ட பல்வேறு பொதுநலப் பணிகளும் செவ்விதாய் நடைபெறாதிருத்தற்குக் காரணம் அப்பணியாளர்கள் இறைவனுடைய அருள் வழிப்பட்டு ஒழுகாமையேயாம். இதனாலே சைவசமய உண்மை நமது நாட்டில் விளங்கினால் நமது நாடு மிக்க சிறப்படையும் என்பது நன்கு விளங்கும். இதனாலன்றோ பண்டைத் தமிழ்நாட்டு மன்னர்கள் அருளுடைப் பெரியாரைத் துணைக்கொண்டு, தங்கள் செவி கைப்ப அவர்கள் இடித்துக் கூறும் அறவுரையைக் கேட்டுத் தங்கள் அரசியல்களை நடத்திவந்ததாகத் திருக்குறள்முதலிய பண்டைத் தமிழ் இலக்கியங்களால் நாம் அறிகிறோம்.

ஆகவே, பொய்யடிமையில்லாத புலவர் என்றதனால் மெய்யடிமையுள்ள புலவராயே இருத்தல்வேண்டும் என்பது தெளிவு. ஆயினும் மக்கள் முதற்கண் பொய்யாகிய காரிய

உலகத்துக்கு அடிமைப்பட்டுத் தங்கள் அறிவு, வேட்கை, செயல்களைப் பயன்குறித்து அறவழியில் நிகழ்த்திப் பல பிறவிகளில் வாழ்ந்து அதன் பயனுகவந்த அனுபவ அறிவினுலேமட்டும் பொய்உலகத்துக்கு அடிமைத் தன்மையையும் அதனுல் வரும் சிற்றின்பத்தையும் விட்டு நீங்கி, மெய்யாகிய சிவத்தைத் தேடி நாடித் தங்கள் அறிவு, வேட்கை, செயல்களைப் பயன்குறியாது அருளின்வழியிலே நிகழ்த்தி மெய்யறிவும் பேரின்பமும் அடைதல் இன்றியமையாது வேண்டப்படுவதா யிருக்கிறது. மனவாசகங்கடந்த தேவநாயனுர், உண்மை விளக்கம் முதலாவது பாட்டில் "பொய்காட்டிப் பொய்யகற்றிப் போதானந்தப் பொருளா - மெய்காட்டு மெய் கண்டாய்" என்று கூறுமாற்றுல் இவ்வுண்மை நன்குவிளங்கும். மெய்கண்டார் சிவஞானபோதம் அ-வது சூத்திர வெண்பாவில், "பன்னிறத்துப் பொய்ப்புலனை வேறுணர்ந்து பொய்பொய்யா மெய்கண்டான் - மெய்ப்பொருட்குத் தைவமாம் வேறு" என்று கூறி அருளினுர். சுந்தரமூர்த்தி அடிகள் மெய்யடிமை உள்ள புலவர் என்று கூறுது தாம் கருதிய உண்மையை விளக்கி வற்புறுத்த, "பொய்யடிமை யில்லாத புலவர்" என்று கூறினுர்.

மனமே கேள்

[அ. மு. பரமசிவானந்தம்]

இன்ப உலகினில் என்றும் நிலைத்திட
எண்ணிடில் நன்மனமே—நீ
திண்மை யுடன் இறை சீர்பதம் பாடித்
தினந் தினம் ஏத்திடுவாய். 1

தோற்றத்தில் கண்டு மயங்கும் வெளியெல்லாம்
சோதி யுடன்சேரும்—அந்த
சோதி பெரும்பொருள் நீயு மறிந்துடன்
சுகமுறு நன்மனமே. 2

யானென தென்னும் செருக்கற்று என்றும்
இயைந்திட வேண்டிடிலோ—நிதம்
வானவன் தன்பதம் வாழ்த்திப் பணிந்து
வணங்கிடு நீ தினமே. 3

உண்மை அறிவினில் உன்னைத் திருத்தியே
ஊக்கமிக அடைந்தே—மனத்
திண்மை கண்டபின்பு சீர்பெற்று வாழ்ந்திட
சீவனும் சுக மடையும். 4

சிற்றின்பம் வெஃகி அறனல்ல செய்யா
திருந்திடு நீ தினமும்—மனப்
பற்றற்று இன்பப் பரம்பொருளை நிதம்
பாடிக் களித்திடுவாய். 5

வாழ விரும்பிடில் வள்ளல் இறையவன்
வளர்பதம் வாழ்த்திடுவாய்—பின்பு
வாழ்வு நிலைபெறும் வளரும் நிதம்புகழ்
வளப்பமே பெற்றிடு வாய். 6

குரங்கின் செயலற்றுக் கொற்றவன் சீர்பதம்
கொண்டு வணங்கிடுவாய்—உயர்
வரங்க ளுடன்பெற்று வண்மை யுட னுற்று
வாழ்ந்திடு நீ கதியே. 7

சத்திய வாழ்வில் திளைத்திட வேண்டிடில்
சத்தி யனைப்பணிவாய்—உயர்
முத்தி அடைந்துடன் மும்மைப் புவனமும்
முற்றும் நினைப்பணியும். 8

நற்பொருள் காட்டி இஞ்ஞான மொழியுமே
நானும் உனக்குரைத்தேன்—இதைப்
பெற்றுநீ மெய்வழி உற்று நிதம்உயர்
பேறிது வேஉனக்கே. 9

சைவர் யாவர்?

[வித்துவான் எ. ஆளவந்தார்]

இவ்வினாவிற்குத் தக்க விடை காணுமுன் சைவமென்னுஞ் சொல்லைப் பற்றியும், அச்சொல் எப்போது எழுந்தது என்பதைப்பற்றியும், அதனடியாகப் பிறந்த சைவர் என்பது இக்காலத்து யாரை யுணர்த்துகிறது என்பது பற்றியும் அவசியம் அறிய வேண்டும்.

சைவமென்பது சிவசெந்றியாகும். சிவமென்பது செம்மையினடியாகப் பிறந்த சொல்லாம். பரம்பொருளின் பல வடிவங்களுள் அந்தி வண்ணனாகிய செந்தீ வண்ணனது வண்ணம் அவ்வாறிருத்தலால் சிவமென்பது அவற்குப் பெயராமென்க. 'பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னும் செம்பொருள் காண்பதறிவு' என்றும், இன்சொலால் ஈரமளைஇப் படிறிலவாஞ் செம்பொருள் கண்டார் வாய்ச்சொல்' என்றும் காணப்படும் வள்ளுவனாரின் தெள்ளிய மொழியாலும் இது வலியுறுத்தப்படும்.

இனி அச்சிவத்தின் தன்மை தான் யாதோவெனின்,

அன்புஞ் சிவமுமிரண் டென்ப ரறிவிலார்
அன்பே சிவமாவ தியாரு மறிகிலார்
அன்பே சிவமாவ தியாரு மறிந்தபின்
அன்பே சிவமா யமர்ந்திருப் பாரே.

என்னும் திருமூலரது மந்திரத்தால் அன்புஞ் சிவமுமொன்றேயாய் ஒன்றின் தன்மையையே மற்றொன்றும் மாண்புறுத்துவதாய், இரண்டும் ஒன்றையே யுணர்த்துவனவாய்ச் சொல்லளவானன்றிப் பொருளளவாற் றம்முள் வேற்றுமையிலாதனவாம். ஆயின் ஆக்கமுளதால், இரண்டும் வேறுமெனின், அற்றன்று. 'அவனே இவனுவான்' ஒன்று தோற்ற வேற்றுமையால் அறியாற்கு அறிவுறுத்திக்காட்டலான் ஆக்கம் அறியானது அறிவின் பாலதன்றிப் பொருட்கண் யாதொரு வேறுபாடுமிலதென்க. இதனை இன்னும் விளக்குவல். சந்திரன் சதுரமாயிருப்பதாகப் பிறழவுணர்ந்தானொருவன் வட்டமாயிருப்பதைப் பிறகு திட்டமாய்த் தெரி

யின் இவனது அறியாமையாலுண்டான சதுரவடிவம் சந்திரனைச் சாராதது போலாம்.

இச்சொல் எக்காலத்து எழுந்தது? மக்கள் இறையுணர்ச்சி பெற்ற அறுதி காலந்தொட்டு இறைவனை யணுகவுதவும் பல்வகைத்தாகிய நெறிகளுள் அன்பு நெறியானே அணுகி அவன்றன்மை இனைத்தென் றுணர்ந்தோர் அவன் அவ்வன்பின் நிறைவேயா யிருத்தல்கண்டு அவனைச் சிவனென்றும், அன்பென்றும் அழைப்பாராயினர். தாயுமானுரும், 'அரும் பொனே. மணியே, யென்னன்பே' என்றருளியிருத்தல் அறியற்பாலது. ஆகவே, இறைவனை எக்காலத்து அன்பால் வழுத்தத் துவங்கினரோ அக்காலத்தே இச்சொல்லு மெழுந்திருக்கவேண்டும். அது கூறமுடியாத அறுதிக்காலத்தில் தொடங்கி யிருக்கவேண்டு மெனின், இதுவுமவ்வாறே யாமென்க.

அன்பென்பது உயிரின் ஒருமைப்பாட் டுணர்ச்சியாம். இவ்வுணர்ச்சி அனைத்துயிர்க்கும் பொதுவாயினும் சிலவற்றிற்குத் தன்மட்டிலும், பலவற்றிற்குத் தொடர்புடையாரிடத்தும், மற்றும் பொருண்மேலும், அரிதாக வெகு சிலவுயிர்க்கே எல்லாவுயிர்களிடத்தும் இருத்தல் கண்கூடு. முன்னையது விலங்கியற்கையும், இடையது மக்களியற்கையும், பின்னது இயற்கையுமாம். மக்களிடத்தும் விலங்கியற்கை காணப்படுகிறதே யெனின், அது உடலால் மக்கட்டன்மை யெய்தியோர், உளத்தால் அந்நிலை யெய்தாத அவர்கள் குறையேயாம். எல்லா வுயிர்களிடத்தும் பொதுவாக அன்பு புரிவோனை நாம் உடலின்றன்மை நோக்காது உளத்தின்றன்மையே உவந்து தெய்வமாகத் தெளிந்து உய்கின்றோம் அல்லமோ?

ஆனல் இக்காலத்தில் நிலைமை மாறுபட்டிருக்கிறது. சைவம் வேடத்தில் நிற்கிறது.

அன்பீர்! வேடத்தை யான் இழித்துரைப்பதாக எண்ண வேண்டா. உண்மையன்பு அகத்தில்லாவிடின் இவ் வேடப்பொலிவு உலகத்தாரை மருட்டற் கன்றி இறைவற்கு ஏற்புடைத்தாகா தென்பதே யான் இயம்பவெண்ணியது.

"நவசக்தி"

ஞானமணி விளக்கு

[திரு. இருக்கம்-ஆதிமூல முதலியார்]

(*Copy right*)

(மலர் - கஉ, இதழ் - உ, ககஉ-ம் பக்கத் தொடர்ச்சி)

மாயை கடவுளிடத்தில் அதிசூக்குமமாயிருக்கும் சடப் பொருள். இதனைக் கடவுள் தனு கரணம் புவனம் போகம் என்னும் நால்வகைப் பொருள்களாகக் காரியப்படுத்தி உயிர்களுக்குக் கூட்டுவிப்பர். ஆதலால் மாயை காரணம் எனவும், உலகு அதன் காரியம் எனவும் சொல்லப்படும். இவற்றுள் தனு என்பது புல் பூண்டுகள் முதல் தேவர்களீறாக உள்ள உயிர்களெடுக்குஞ் சரீரங்கள். கரணம் என்பது அவ்வச்சரீரத்திற் கேற்றவாறிருக்கும் மனம் புத்தி சித்தம் அகங்காரம் முதலியன. புவனம் என்பது அளவுபடாத உலகங்கள். போகம் என்பது உயிர்கள் அநுபவிக்கும் இன்ப துன்பங்கள்.

இம்மாயை வியாபகமாய், உயிர்கள் செய்யும் வினைக்குப் பற்றுக்கோடாய், ஆணவமலம்போற் சிறப்பு வகையானன்றிப் பொதுவகையான் வினையிற் கட்டுண்ட ஆன்மாக்களை மயக்குவதாய் அருவமாயிருக்கும். வினையிற் கட்டுண்ட ஆன்மாக்கள் மாயை வயப்பட்டுப் பொய்யும் அநித்தியமும் துக்ககரமுமாயிருக்கும் உலக வாழ்க்கையை, மெய்யும் நித்தியமும் இன்பகரமுமாக மதித்து உலக வாழ்க்கையில் மிகுமோகங்கொண்டு மயங்கிக் கிடக்கும். இறைவனை வழிபட்டு அவன் அருளைப்பெறின் உயிர்களை மாயை மயக்காது.

பூமியிலுள்ள நீர் சூரியகிரண வெப்பத்தால் நீராவியுருப்பெற்று ஆகாயத்தில் தங்கியிருந்து, ஆகாயம் குளிர்ந்தபோது முன்போல் நீராக மாறி மழையுருக்கொண்டு பூமியில் இறங்கிவந்து, பயிர்களுக்கும் மற்றுமுள்ள உயிர்களுக்கும் உணவாயிருந்து மீண்டும் நீராவி யுருப்பெற்று வானத்தையடையும். இப்படியே ஓயாமல் நீர் ஆவியாய் வானத்தை யடைதலும், நீராய் நிலனையடைதலும்போல்,

மாயையானது கடவுளின் சத்தி சங்கற்பத்தால் பலகோடி யண்டங்களாகவும், அவற்றிலிருக்கும் உயிர்களுக்கேற்ற தனுகரண முதலியனவாகவும் காரியப்பட்டு, அவ்வவ்வுயிர்களின் கன்ம வேறுபாடுகளுக் கேற்பச் சிலகாலமோ அன்றிப் பலகாலமோ நிலைத்திருந்து, பின்னர் அதிசூக்கும வுருவடைந்து மாயையில் இலயமாகும். இவ்வாறு கடவுள் ஆன்மாக்கள் பொருட்டு மாயையெனப்படும் அதிசூக்குமமாகிய பொருளைச் சூக்குமமுந் தூலமுமாயிருக்குந் தனுகரணபுவன போகங்களாகக் காரியப்படுத்தல் சிருட்டியெனவும், அவை யுயிர்களின் கன்ம வேறுபாடுகளுக் கேற்ப நிலைத்திருக்கச் செய்தல் திதியெனவும், கன்மானுபவங்கழிந்தவழி அவை மீண்டும் அதிசூக்கும உருப்பெற்று மாயையில் இலயமாகுமாறு செய்தல் சங்காரம் எனவுஞ் சொல்லப்பட்டு இம்முத்தொழிலும் எக் காலமும் நடைபெற்றுக் கொண்டிருக்கும்.

இவ்வாறு இறைவன் ஞானாகாசமாகிய பரவெளியிலிருந்து ஓயாது செய்யுங் கிருத்தியமே அனவரதத் தாண்டவமாகச் சிதம்பரதலத்தில் வணங்கப்படும்.

அதிசூக்குமமாகிய மாயை பலவகைப்பட்ட பலகோடி தனுகரண புவன போகங்களாக மாறுதல் பின்னும் எதுபோலுமெனில், உயிர்கள் உண்ணும் உணவின் சத்தொன்றே சரீரமெங்கும் பரவிப் பலவகைப்பட்ட அவயவங்களாக மாறுவது போலுமென்க.

மாயையிலிருந்து விரிந்த வுலகம் மீண்டும் மாயையில் இலயித்தல் எதுபோலுமெனின், மண்ணினின்றும் உற்பத்தியாகும் பொருள்கள் மீண்டும் மண்ணாய் மாறுவதுபோலுமென்க.

கடவுளிடத்தில் இருவிதச் சத்திகள் உண்டு. இவற்றுள் ஒன்று அருட்சத்தியும், மற்றொன்று மாயை யெனப்படுஞ் சத்தியுமாம். அருட்சத்தி யென்பது அவருடைய

குணமேயாய், சரீரத்திலுள்ள கை சரீரத்தினின்றும் வேறு காதுபோல் அவரோடு பிரிவற விருப்பது. இது தாதான்மியசத்தி யெனப்படும். மாயை யென்பது கையிலுள்ள தடியைப்போல் பிரிந்தும் பிரியாமலும் இருப்பது. இது வைப்புச் சத்தியெனவும் பரிக்கிரகச் சத்தி யெனவுஞ் சொல்லப்படும்.

ஒரு பெரிய யந்திரசாலையில் சிறியனவும் பெரியனவுமாகிய பல யந்திரங்கள் அவைகளுக்கெல்லாம் ஆதாரமாகிய மூல. யந்திரத்தை ஒரு புருஷன் இயக்க யியங்கிப் பலவகைப்பட்ட தொழில்களைச் செய்வதுபோல், உலகத்திலுள்ள பலவகைப்பட்ட பொருள்களின் (Force எனப்படும்) சத்திகளெல்லாம் அவைகளுக்கெல்லாம் மூலமாகிய மாயை யென்னுஞ் சத்தியைக் கடவுள் இயக்க இயங்கும். இதனால் தாயுமான சுவாமிகள் "அவனன்றி ஓரணுவு மசையாது" என்றனர்.

கிழங்கினின்றுந் தோன்றிய தாமரையைப் பங்கஜம் (அதாவது சேற்றினின்றுந் தோன்றுவது) என்று கூறுவது போல் மாயையினின்றுந் தோன்றிய உலகைக் கடவுளினின்றும் தோன்றியதென்பர்.

மாயையிலிருந்து காரியப்படும் பொருள்கள் தத்துவங்கள் எனப்படும். அவை பிருதிவி அப்பு தேயு வாயு ஆகாயம் என்னும் பூதங்களைந்தும், சோத்திரம் தொக்கு சட்சு சிங்குவை ஆக்கிராணம் என்னும் ஞானேந்திரியம் ஐந்தும், சத்தம் பரிசம் ரூபம் ரசம் கந்தம் என்னும் தன்மாத்திரைகளைந்தும், வாக்கு பாதம் பாணி பாயுரு உபத்தம் என்னும் கன்மேந்திரியம் ஐந்தும், மனம் புத்தி சித்தம் அகங்காரம் என்னும் அந்தக்கரணம் நான்கும் ஆகிய இவைகளும் இவைகளுக்கு அப்பாற்பட்டனவுமாம்.

பிருதிவி = மண். அப்பு = நீர். தேயு = நெருப்பு. வாயு = காற்று. ஆகாயம் = வெளி. சோத்திரம் = செவி. தொக்கு = உடம்பு. சட்சு = கண். சிங்குவை = நாக்கு. ஆக்கிராணம் = மூக்கு. வாக்கு = வாய். பாதம் = கால். பாணி = கை. பாயுரு = அபானம். உபத்தம் = குறி.

மனம் ஒன்றை நினைப்பது; புத்தி அதனை விசாரிப்பது; அகங்காரம் யான் என்னும் வடிவினதாய் அதனைக் கொண்டு மேன்மேலும் எழும்புவது; சித்தம் அதனைச் சிந்திப்பது.

கன்மம்

உலகத்தில் அளவற்ற உயிர்களைக் காண்கிறோம். இவை ஒன்றைப்போல் மற்றொன்றிராமல் ஒவ்வொன்றும் ஒவ்வொருவிதமா யிருக்கின்றன. இவற்றுள் பல ஓரறிவுடையன; பல ஈரறிவுடையன; பல மூவறிவுடையன; பல நாலறிவுடையன; பல ஐயறிவுடையன; பல ஐயறிவுடன் பகுத்தறியும் அறிவுமுடையன. ஆண் பல, பெண் பல, அலி பல. பல சிலகாலமே சீவிக்கின்றன; பல நெடுங் காலஞ் சீவிக்கின்றன; பல பிறந்தவுடனே யிறக்கின்றன; பல இளமையிலிறக்கின்றன; பல முதுமையிலிறக்கின்றன; பல விருத்தாப்பியத்திலிறக்கின்றன. பல இன்பத்தை அதிகமாகவும் துன்பத்தைக் கொஞ்சமாகவும் அனுபவிக்கின்றன. பல துன்பத்தை அதிகமாகவும் இன்பத்தைக் கொஞ்சமாகவும் அனுபவிக்கின்றன. இவைகளெல்லாவற்றையும் படைக்குங் கடவுள் ஒருவரேயாயிருக்க, அவர் இவைகளை என் இத்தனை விதமாகப் படைத்தல்வேண்டும்? இவ்வாறு படைத்தல் அவர் விருப்பம் எனில், அவர் விருப்பும் வெறுப்பும் பட்சபாதமும் உடையவர் என்று சொல்லப்படுவர். விருப்பு வெறுப்பில்லாமையும், பேரருளுடைமையும் அவர் குணங்

களாயிருத்தலால் அவர் இவ்வாறு படைத்தற்கு அவர் விருப்பம் காரணமாகாது. அதற்கு வேறு காரணம் இருத்தல்வேண்டும். அதுவே கன்மம் என்று சொல்லப்படும்.

உயிர்கள் செய்யும் புண்ணியம் பாவம் எனப்படும் நல்வினையுந் தீவினையும் கன்மம் எனப்படும். இது பிராரத்துவம், ஆகாமியம், சஞ்சிதம் என மூவகைப்படும். பிராரத்துவமாவது முற்பிறவிகளிற் செய்தவை; ஆகாமியமாவது பிராரத்துவத்தை யனுபவித்துக்கொண்டிருக்கும்போது புதிது புதிதாய் வந்து சேர்பவை; சஞ்சிதமாவது அனுபவித்தவை போக இனி யனுபவிக்குமாறு எஞ்சிநிற்பவை.

வித்துக்கு மரமும் மரத்திற்கு வித்தும் காரணமாயிருப்பதுபோல், கன்மத்துக்குச் சரீரமும் சரீரத்திற்குக் கன்மமும் அநாதியாகவே காரணமும் காரியமுமா யிருந்துவரும்.

கன்மம் ஆன்மாக்கள் செய்த கிரமத்தின்படி சென்று பொருந்தினும் பொருந்தும், கன்மத்தின் வன்மை மென்மைகளுக்கேற்றவாறு முன்பின்னாக மாறிப் பல பிறவிகளிற் சென்று பொருந்தினும் பொருந்தும். இது எப்படியெனில் ஒரேகாலத்தில் நிலத்தில் விதைக்கப்படும் பலவகை வித்துக்கள் பலவாறாக முளைத்துப் பயன் தருவதுபோலுமென்க.

உயிர்கள் செய்யும் கன்மங்கள் அவற்றைச் செய்த உயிர்கள் அனுபவித்துத் தொலைத்தாலன்றித் தொலையா. ஆயினும் தவம் முதலிய பரிகாரத்தால் சில கன்மங்கள் நீங்குவதும் உண்டு.

> "புண்ணியமாம் பாவம்போம் போனநாட் செய்தவவை
> மண்ணிற் பிறந்தார்க்கு வைத்தபொருள்"

ஆதலால் மனிதர்கள் எளிதென்று தீவினை செய்யாதிருக்கக்கடவர்.

சில குழந்தைகள் பேசக்கற்றபின் தாம் முற்சென்னனத்தில் வசித்த இடம், பந்துக்கள் முதலியவற்றைக் கூறுவதனால் மறு பிறவியுண்டென்பது மறுக்கொணாத பிரத்தியட்சப் பிரமாணமாம்.

ஒரு நெல் பல நெல்லாய் விளைவதுபோல் ஒரு வினை பல வினைகளுக்குக் காரணமாதலும் உண்டு.

சஞ்சிதம் ஞானாசிரியன் திருநோக்காற்போம்; ஆகாமியம் நிட்டையாற்போம்; பிராரத்துவம் தேகத்தோடுபோம்.

கன்மம் பதிபுண்ணியத்தால் பரிபாகமடையும்.

ஆகாமிய கன்மம் உயிர்களால் புத்தி பூர்வமாகவும், அபுத்தி பூர்வமாகவும் ஈட்டப்படும். புத்தி பூர்வமாவது நாம் இதைச் செய்கிறோம் என்று தெரிந்து செய்தல். அபுத்திபூர்வமாவது நாம் இதைச் செய்கிறோம் என்பதையறியாமற் செய்தல்.

அரசன் கட்டளையை அறிந்து மீறினாலும், அறியாது மீறினாலும், மீறி நடப்பவர் தண்டிக்கப்படுவதுபோல், புண்ணிய பாவங்கள் இவை புண்ணியம் எனவும், இவை பாவம் எனவும் தெரிந்து செய்யினும் தெரியாமற் செய்யினும் அவற்றின் பலன்களைப் பயவாமலிரா.

மூன்றாம் பாகம்

தேவாலயம்

தமிழ் நாட்டிலுள்ள தேவாலயங்களின் கோபுரங்கள் பல நிலைகளையுடையனவாய் மேகமண்டலத்தை யளாவியிருக்கும். அவைகளில் தீட்டப்பட்டிருக்கும் ஓவியங்களாலும், பல தேவர் உருவங்களாலும் அவை இறைவனுடைய விசுவ ரூபம்போற் காணப்படும். அவை வெகுதூரத்தி

விருப்பவர்களாலும் அவ்வாலயங்களிலுள்ள இறைவனுகவே பாவித்து வணங்கப்படும்.

அக்கோபுரங்களின் உச்சியில் அசைந்தாடுந் துகிற் கொடிகள் ஆகாயத்தில் போக்குவரவு புரியுஞ் சந்திரனைத் தாக்குதல்போற் காணப்படுதல், அவை அச்சந்திரனை நோக்கி "வெண்மதி, நீ தக்கன் யாகத்தில் மிதித்துத் துவைக்கப்பட்டாய், திருப்பாற் கடலிலுண்டாகிய வமுதத்தைத் திருமால் இராகு கேதுக்களாகிய பாம்புகளுக்குப் பங்கிடாதபடிப் புறங்கூறித் தடுத்தனையாதலால் எம்பிறைவன் சடாமகுடத்திலுள்ள அரவம் உன்னை விழுங்கச் சமயம் பார்த்துக் கொண்டிருக்கிறது. அன்றியும், நீ கயரோகி. இக் காரணங்களால் நீ எம்மிறைவன் கோயிலுக்கு வர அருகனல்லை. ஓடிப்போ" என்று அடித்துத் துரத்துவதுபோலிருக்கும். அவ்வாணிலா தனது சீதவமுதகிரணத்தை அக்கொடிகளுக்கு வழங்கி அவை பகலெல்லாம் வெயிலினால் அடைந்த வெப்பத்தைத் தணித்தல் கொடியார் எத்துணைக் கொடுமை செய்யினும் மதியார் செய்திடும் உதவியை யுணர்த்தும்.

எங்குமாயும் யாவையுமாயு மிருக்கும் இறைவன் விக்கிரகங்களினும் வியாபித்திருத்தலினாலும், தன்னை யார் யார் எந்தெந்த ரூபமாய்ப் பூசிக்கிறார்களோ அவரவர்களுக்கு அவரவர் அன்பின் அளவாக அந்தந்த ரூபமாயிருந்து அருள் செய்தலாலும், விக்கிரகங்கள் இறைவன் இலக்கணங்களையும் அருட்திருவிளையாடல்களையும் படம் பிடித்துக் காட்டுவதுபோல் உணர்த்தி அன்பு மீதூரச் செய்தலாலும், ஆலயங்களிற் சென்று வழிபடும் பெரியோர்களின் தரிசன விசேடத்தாலும், அப்பெரியோர்களின் பாவனுவிசேடத்தால் பொய்வேடத்தினரும் மெய்யன்பராக மாறுதலாலும், இடைவிடாது செய்யும் வழிபாட்டினால் மனிதர்களின் அந்தக் காரணங்களும் புறக்காரணங்களும் சீவத்தன்மையினின்று.

நீங்கிக் கடவுட்டன்மை யடைந்து, அருள் விளக்கம் அடைத லாலும் "ஆலயந் தொழுவது சாலவு நன்று" என்னப் பட்டது.

கடவுள் யாதொரு குறியுங் குணமுமின்றி கற்பனை கடந்து நின்ற தற்பரம் பொருள் என்றும், அவர் உயிர்களின் மீது வைத்த கருணையால் சிருட்டி முதலிய தொழில்களைச் செய்யும் பொருட்டுச் சிவலோகத்தில் சந்திரனையும் கங்கை யையும் தரித்த சடாமுடி முதலிய அவயவங்களோடு உமை யம்மையாரோடுங் கூடிய திருமேனிகொண் டெழுந்தருளி யிருக்கின்றாரெனவும், வைகுந்தத்தில் சங்குசக்ரதாரியாய் இலக்குமிதேவியுடன் கூடிய திருமேனிகொண் டெழுந்தருளி யிருக்கின்றாரெனவும், ஞானிகள் உள்ளத்தில் அருட்பெருஞ் சோதியா யிருக்கின்றாரெனவும், மற்றவர்களுக்கு விக்கிரக ரூபமா யிருக்கின்றாரெனவும் சைவ வைணவ நூல்கள் கூறும். இவ்வாறு இறைவன் நான்குவிதமாயிருந்து உப கரித்தலை "உலகெலா முணர்ந்தோதற் கரியவன்" எனவும், "நிலவுலாவிய நீர்மலி வேணியன்" எனயும், "அலகில் சோதியன்" எனவும் "அம்பலத்தாடுவான்" எனவும் சேக் கிழார் சுவாமிகள் தோத்திரஞ் செய்தனர். ஈண்டு அம்பலம் என்றது சிதம்பர தலத்தை. கடவுள் ஞானிகளுள்ளத்தில் அருட்பெருஞ் சோதியா யிருத்தலை "பன்னுட் பாவிப் பணி செய்யப் பாதமலர் என்னுகந் துன்னவைத்த பெரியோன் எழிற்சுடராய்" என்னும் மாணிக்கவாசகர் திருவாக்காலறிக.

மனம் வாக்குக் காயங்களுக் கெட்டாத கடவுளை அம் மனம் வாக்குக் காயங்களைக் கொண்டு வழிபடும் இடங்கள் குரு லிங்கம் சங்கமம் என மூவகைப்படும். இவற்றுள் இலிங்க வழிபாடு விக்கிரக வழிபாடாகும்.

கடவுளின் அருள் விளக்கம் பிறவிடங்களில் பாலி னுள்ள நெய்போல் மறைந்திருக்கும். ஆலயங்களில் தயிரி

லுள்ள நெய்போல் வெளிப்பட்டு நிற்கும். ஆதலால் சைவ சமய குரவர்களும் வைணவ ஆழ்வார்களும் தங்கட்கு வேண்டுவனவற்றை ஆலயங்களிற் சென்று கடவுளை வேண்டிப்பெற்றார்கள். "விளிதரு நீருமண்ணும் விசும்போடனல் காலுமாகி - அருடரு பேரருளாளனாகிய வாதிமூர்த்தி - களிதருவண்டு பண்செய் கமழ்கொன்றையி னோடணிந்த - ஒளிதரு வெண்பிறையா னுறையும் மிடமொற்றியூரே" என்று திருஞானசம்பந்தர் அருளிச் செய்ததை ஓர்ந்துணர்க.

"குழந்தையுந் தெய்வமுங் கொண்டாடுமிடத்தில்" என்னும் பழமொழியின்படி, குழந்தை தன்னை ஆசையோடெடுத்து அன்பு பாராட்டுவோரிடத்திற் சென்று மகிழ்வது போல், கடவுள் தம்மை அன்போடு அபிஷேகித்தும், அருச்சித்தும் தோத்திரஞ் செய்தும் விழாச்செய்தும் பூசிப்பவர்களிடம் உறவாடியருள் புரிகிறார். ஆனால் அவர் அவ்வாறு அருள்புரிதலை ஆணவமல மறைப்பால் உயிர்கள் அறிவதில்லை.

தேவாலயங்களில் பல மண்டபங்களிருக்கும். அவைகளிற் சிலவற்றுள் அந்தணர்கள் வேதங்களையும் வேதாங்கங்களையும் ஓதியுணர்ந்து தம் மக்களுக்கும் பயில்விப்பார்கள். சிலவற்றுள் வேதியர்கள் ஆகமங்களை யோதியுணர்ந்து தம் பிள்ளைகளுக்கும் போதிப்பார்கள். சிலவற்றுள் பண்டிதர்கள் புராணம் இதிகாசம் முதலியவற்றைப் பிரசங்கிப்பார்கள். சிலவற்றுள் அன்பர்கள் ஒன்று கூடி கீதம்பாடி தோத்திரஞ் செய்வார்கள்.

சிவலிங்கம்

ஆலயங்களிற் பிரதிட்டித்துப் பூசிக்கப்படும் மூர்த்தங்கள் பல தத்துவார்த்தங்களை யுணர்த்துவனவாம். அவைகள்

வேதங்களிலும் ஆகமங்களிலும் விஸ்தாரமாய்க் கூறப்பட்டுள்ளன. அவற்றுள் சமுத்திர கலச நியாயமாக சில இதில் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன.

கடவுளாற் படைக்கப்பட்ட உலகங்கள் பலகோடியாகும். இவைகளும் இவற்றில் வாழும் உயிர்களின் சரீர முதலியனவும் தூலமாகவும் சூக்குமமாகவும் அதிசூக்குமமாகவுமிருக்கும். ஆதலால் கடவுளும் இவைகளுக்கேற்றவாறு உருவம் அருவம் அருவுருவம் எனப்படும் மூவகையருட்டிருமேனிகளைக் கொண்டருளுவர். இவை வடமொழியில் சகளம் நிட்களம் சகளநிட்களம் எனப்படும். இவற்றுள் உருவத்திற்கு மண் நீர் முதலியனவும் அருவத்திற்கு மனம் அருள் ஞானம் முதலியனவும் உவமானப் பொருள்களாம். தீச்சுடர் அருவுருவத்திற்கு உவமானமாகும். அகலில் எண்ணெயும் திரியுமிட்டுக் கொளுத்தினல், இவையிரண்டும் முற்றிலும் எரிந்து அருவமாய்ப் போவதன் முன் எரிந்தும் எரியாமலுமிருக்கும் பாகம் சுடரெனப்படும். ஆதலால் இது அருவுருவத்திற்கு உவமானமாகச் சொல்லப்படும். கடவுளின் இம்மூவகைத் திருமேனிகளை மாணிக்கவாசகர் “சோதியே சுடரே சூழொளி விளக்கே” என்று தோத்திரஞ் செய்தனர். இதில் சோதியே என்றது அருவத் திருமேனியை. சுடரே என்றது அருவுருவத் திருமேனியை. விளக்கேயென்றது உருவத் திருமேனியை.

கடவுளுடைய அருவத்திருமேனி ஞானகாசம் எனப்பொருள்படும் சிதம்பரத்தில் வணங்கப்படுகிறது. உருவத் திருமேனி சபாபதி, சோமாஸ்கந்தர், சந்திரசேகரர் முதலிய மூர்த்தங்களாகவும், அருவுருவத்திருமேனி சிவலிங்கமூர்த்தியாகவும், எல்லாச் சிவாலயங்களிலும் வணங்கப்படும். இச்சிவலிங்கம் சுடர்வடிவமா யிருக்கும்.

சிவாலயங்களில் வணங்கப்படும் எல்லா மூர்த்தங்களுள்ளும் சிவலிங்க மூர்த்தமே பிரதானமாயிருக்கும். ஆதலால் மற்ற மூர்த்தங்களில்லாத சிவாலயங்களிருந்தாலும் சிவலிங்கமில்லாத கோயில் இராது.

இறைவன், பிரமன் விண்டு உருத்திரன் என்னும் மூவரை யதிட்டித்து இவர்கள் வாயிலாக, சிருட்டி திதி சங்காரம் என்னும் மூவகைத் தொழில்களையும், மகேசுரனுக விருந்து திரோபவம் என்னுந் தொழிலையும், சதாசிவனுயிருந்து அனுக்கிரகம் என்னுந் தொழிலையும் செய்தலால் சதாசிவ மூர்த்தமே மற்ற மூர்த்தங்களினும் மேலாகக் கருதப்பட்டுச் சிவலிங்க ரூபமாக வணங்கப்படும்.

சிவலிங்கம், காணுத அருவினுக்கும் காணப்படும் உருவினுக்குங் காரணமாயிருத்தலையும், சிவமும் சத்தியும் வெவ்வேருயிராமல் குணமும் குணியுமென ஏகமாயிருத்தலையும் உணர்த்தும் குறியாகும்.

நடராஜர் (சபாபதி)

நடராஜ மூர்த்தம் இறைவன் பஞ்ச கிருத்தியங்களைச் செய்தலையுணர்த்தும்.

கடவுளாற் சிருட்டிக்கப்படும் பொருள்கள் நாதம்முதல் பிரிதிவி ஈருகவுள்ள தத்துவங்கள் எனப்படும். இவற்றுள் முதலில் தோன்றியது நாததத்துவம் எனப்படும். இது ஓம் எனப்படும் பிரணவ ரூபமாகிய ஒலி யென்னப்படும். இவ்வொலி உடுக்கையென்னும் வாத்தியத்தில் உண்டாதலினுல், நடராஜமூர்த்தி இவ்வாத்தியத்தை யேந்திய திருக்கரம் சிருட்டித் தொழில் செய்தலையுணர்த்தும். இன்னொரு திருக்கரம் அபயகரம் என்னப்பட்டு, பிறப்பிறப்புக்களுக் கஞ்சித் தன்னைச் சரணடையும் அன்பர்களுக்கு இறைவன் அஞ்சல் என்று அபயமளித்தலையும், தான் படைத்த தனுகரணபுவன

போகங்களை உயிர்களின் கன்மங்களுக்கேற்ப நிலைத்திருக்கச் செய்தலாகிய திதியென்னுந் தொழிலைச்செய்தலையும் உணர்த்தும். இன்னுமொரு திருக்கரம் அக்கினியை ஏந்தி, நெருப்பிலிடும் பொருள்கள் சூக்கும உருவடைந்து ஆகாயத்தையடைவதுபோல், மாயையினின்றும் இறைவன் தோற்றுவித்த உலகத்தை மீண்டும் மாயையில் இலயிக்கச்செய்தலாகிய சங்காரம் என்னுந் தொழிலைச் செய்தலையுணர்த்தும். முயலகன்மீது ஊன்றியிருக்குந் திருவடி, முன்னொரு காலத்தில், தாருகவன முனிவர்கள் முயலகன் எனப் பெயரிய வரக்கனொருவனை வேள்வித்தீயினின்றுந் தோற்றுவித்துக் கயிலைமலையில் வீற்றிருக்கும் இறைவன் மீதேவ, இறைவன் அவனை உதைத்துத் தள்ளி அவன் முதுகின்மேல் ஒரு திருவடியையூன்றி நடித்துத் தான் மாயாதீதன் என்பதை விளக்கியருளியதையும், உயிர்கள் மலபரிபாகம் பெற்றுத் தன்னை வந்தடையவேண்டி, அவைகள் செய்த கன்மபலன்களை அவைகள் அழுந்தி அனுபவிக்கும் வண்ணம் மறைத்து நின்றாட்டுதலாகிய திரோபவம் என்னுந் தொழிலைச் செய்தலையும் உணர்த்தும். தூக்கிய திருவடி மலபரிபாகம்பெற்ற உயிர்களுக்குத் தன் திருவடியின்பத்தைக் கொடுத்தலாகிய அனுக்கிரகம் என்னுந் தொழிலைச் செய்தலையுணர்த்தும்.

நடராஜமூர்த்தி சிதம்பரத்தில் தாண்டவஞ் செய்தல், அவர் பரஞானப் பரவெளியா யிருப்பவர் என்பதையும், அவர் ஞானிகளின் உள்ளத்தைக் கோயிலாக்கொண் டெழுந்தருளியிருப்பர் என்பதையும், ஞானசொரூபமாய் கற்பனை கடந்த சோதியாயிருக்கும் அவர், பஞ்சகிருத்தியம் செய்ய வேண்டித் திருமேனி தரித்தருளுவர் என்பதையும் உணர்த்தும். அவர் திருமுன் இருக்கும்படிகள் பஞ்சாக்கரப்படி யென்னப்பட்டுப் பஞ்சாக்கரத்தியானத்தால் அவரை யடைதல் கூடும் என்பதையுணர்த்தும்.

சிவபெருமான் தமதருளேயே திருமேனியாகவும் அருட் சத்தியையே சிவகாமியம்மையாராகவும் சகளீகரித்து, உயிர்களுக்கு அம்மையப்பராக எழுந்தருளி, அவ்வருட்சத்தி வசப்பட்டுப் பஞ்சகிருத்தியம் செய்தருளுவதை சிவகாமியம்மையார் கண்டுகளிக்க அவர் நடனஞ்செய்கிறார் என்று நூல்கள் கூறும்.

மனிதர்கள் செய்யும் நடத்தல் இருத்தல் படுத்தல் தூங்கல் கூத்தாடல் முதலிய தொழில்களுள் கூத்தாடல் ஆனந்த மேலீட்டினாற் செய்யப்படுந் தொழிலாதலால் இறைவன் எக்காலத்தும் இன்ப வடிவினனாயிருப்பதை அவன் திருக்கூத்து உணர்த்தா நிற்கும். அன்றியும், இறைவன் பஞ்சகிருத்தியங்களைச் சிரமப்பட்டுச் செய்யாமல் விளையாட்டாகச் சிரமமின்றிச் சங்கற்ப மாத்திரையால் செய்கின்றான் என்பதையும் திருக்கூத்து உணர்த்தும்.

இறைவன் செய்யும் அதிசூக்குமமாகிய தொழில்களையும், ஞானமயமாகிய அவன் திருமேனியையும் தூலமாகிய திருவுருவத்தில் பாவித்து வணங்குதல் நடராஜ மூர்த்தி முதலிய வடிவங்களை வழிபடுதலின் நோக்கமாகும்.

தக்ஷிணாமூர்த்தி

தட்சிணாமூர்த்தியின் திருவுருவம், முன்னொரு காலத்தில் இறைவன் கல்லால விருக்ஷத்தின் கீழிருந்து சனகன் முதலிய நான்கு முனிவர்க்குத் தான் தன்னருளேயே கண்ணாகக் கொண்டு காணினல்லது சுட்டுணர்வினா லறியப்படாதவன் என்பதைச் சின்முத்திரை தாங்கி மோனநிலையிலிருந்து உணர்த்தி யருளியதை யுணர்த்தும். சின்முத்திரை யெனினும் ஞானமுத்திரை யெனினும் ஒக்கும். சின்முத்திரையால் உணர்த்தலாவது வலக்கையிலுள்ள ஐந்து விரல்களுள் பெருவிரலை யிறைவனாகவும், சுட்டு விரலை யான்மாவாகவும், நடு

விரல் மோதிர விரல் சிறு விரல் ஆகிய மூன்றையும் முறையே ஆணவம் மாயை கன்மம் என்னும் மும்மலங்களாகவும் பாவித்து, சுட்டுவிரல் இம்மூன்று விரல்களோடு கூடியிருப்பதுபோல் ஆன்மா மும்மலங்களோடு கூடி யிருக்கும் எனவும், ஆன்மா ஆணவ மல சம்பந்தத்தால் மாயா மலத்தையும் கன்ம மலத்தையும் அடைந்து மும்மலத்தோடுங் கூடியிருக்கும் எனவும், ஆன்மா ஆணவ மலத்தினின்றும் நீங்கினால் இறைவனை யடையும் எனவும் உணருமாறு, சுட்டு விரலை நடுவிரலோடுகூடி யிராதபடி பிரித்து அதனைப் பெருவிரலோடு கூட்டி வலக்கையை மார்பினிடம் வைத்து உணர்த்துதலாம்.

சுட்டுவிரல் மற்ற மூன்று விரல்களினின்றும் நீங்கிப் பெருவிரலை நோக்கிச் செல்லுமாயின், அதே சமயத்திற் பெருவிரலும் சுட்டு விரலை நோக்கிச் சென்று அதனோடு கூடுதல், தனக்குத் துன்பஞ் செய்யும் ஏதேனுமொருபொருளைக் கண்டு அஞ்சிய குழந்தை தன் தாயை நோக்கிச் செல்லுமாயின் அத்தாய் ஓடிச்சென்று அக்குழந்தையை யெடுத்து மார்போடணைத்து அச்சம் தீர்த்து முலைப்பாலூட்டி மகிழ்விப்பதுபோல், இறைவன் மாயப்படைக்கு அஞ்சித் தம்மைச் சரணடையும் அன்பர்களுக்குத் தானும் அதே சமயத்தில் விரைந்து அருள் புரிதலை யுணர்த்தும்.

இவ்வுண்மைகளை யறியுமாறும், தம்மை வழிபட்டு உய்யுமாறும் இறைவன் மானிடர்க்குச் சரீரத்தில் அவயவங்களை யமைத்திருக்கின்றான் என்பது இதனால் அறியலாகும்.

ஆலயங்களிற் சென்று வழிபடுவோர், அரசனைக் காணச் செல்லுங் குடிகள், தங்கள் தங்கட்குரிய உடைகளையுஞ் சின்னங்களையுந் தரித்துக் கொண்டு, காலம் பார்த்து, பயத்தோடும் பத்தியோடும் போய் வணங்கி, அங்கு வேறுகாரியஞ் செய்யாமலும், சிரித்தல் எச்சிலுமிழ்தல், தம்பலமுண்

டல், சயனித்தல், பிறரோடு வீண் பேச்சுகளைப் பேசுதல் முதலிய குற்றங்களைச் செய்யாமலும், அரசனுக்குப் புறங் காட்டாமலும் திரும்பிச் செல்வது போல், தங்கள் தங்கள் சமயச் சின்னங்களையும், சுத்தமாகத் தோய்த் துலர்ந்த வஸ்திரங்களையுந் தரித்துக்கொண்டு, பயபத்தியோடும் போய் விதிப்படி பிரதட்சண நமஸ்காரங்கள் செய்து உட்சென்று, கையாரக்கூப்பியும் தலையார வணங்கியும் உள்ளங்கசிந் துருகத் தோத்திரங்கள் செய்து புறங்காட்டாமல் திரும்பிச் செல்லல் வேண்டும். ஆலயங்களிற் பூசனைபுரியும் வேதியர்களை அவ்விறைவன் வடிவமாகவும் ஆசாரியனாகவும் பாவித்து அவர்களால் தரப்படும் திருநீறு முதலியவற்றை இருகையாலும் ஏற்று அணிதல் வேண்டும்.

ஆலயங்களிற் பூசனைபுரியும் வேதியர்கள் வேதங்களையும் ஆகமங்களையும் ஓதியுணர்ந்தவர்களாகவும் சமயம் விசேடம் நிர்வாணம் ஆசாரியாபிஷேகம் என்னுந் தீக்கைகளைப் பெற்றவர்களாகவும், நித்திய கன்மானுட்டானங்களை இடைவிடாது விதிப்படி செய்து, ஆகமவிதி தவறாது, பத்தியோடு பூசனை செய்யவல்லவர்களாகவும் இருத்தல்வேண்டும். கல்வியறிவும் ஒழுக்கமுமில்லாத பார்ப்பானைக் காட்டினும் கல்வியறிவும் நல்லொழுக்கமுமுடைய ஏனைய வருணத்தவரே உத்தமராவர். இது பற்றியே திருவள்ளுவர் "மறப்பினு மோத்துக் கொளலாகும், பார்ப்பான்-பிறப்பொழுக்கங் குன்றக்கெடும்" என்று அருளிச் செய்தனர். கல்வியறி வொழுக்கமில்லாதாரைக் கொண்டு ஆலயங்களில் பூசைசெய்வித்தல் அதி பாதகச் செயலாகும். ஆதலால் கோயில் தருமகர்த்தர்களும் ஏனைய தனவந்தர்களும் கோயில்களிற் பூசிக்கும் வேதியர்களைத் தக்கவாறு ஆதரித்து அவர்கள் கல்வியறிவொழுக்கங்களில் மேம்பட்டிருக்குமாறு செய்தல் வேண்டும். இது

தருமகர்த்தர்கள் ஆற்றவேண்டிய கடமைகள் எல்லாவற்றுள்ளும் இன்றியமையாத கடமையாகும்.

அன்பர்கள் கன்றை நோக்கிச் செல்லுங் கற்றாவைப்போலவும், புதையலை நோக்கிச் செல்லும் வறியனைப்போலவும், அன்புமீதூற ஆலயத்துட் சென்று இறைவனைத் தரிசித்து, உடல் குழையவும், உள்ளம் நெக்குவிட்டுருகவும், கண்கள் ஆனந்தவருவி சொரியவும் தோத்திரஞ் செய்வார்கள். பிறவிக்கடலில் வீழ்ந்து, இருவினைகளாகிய அலைகளால் அலைக்கப்பட்டு, ஆசையென்னும் பெருங்காற்றால் மோதப்பட்டு, காமமாகிய சுறவின் வாய்ப்பட்டு அழியுந் தம்மைத் திருவருளாகிய புணையைத்தந்து முத்தியாகிய கரையிற் சேர்க்க வேண்டுமென்று அலறியலறி யழுவார்கள். இருவினை மலைப்பாம் பொருபாலிழுக்க, ஆணவவேங்கை யொருபாலடர்க்க, மாயைக்குடாவடி யொருபால் மருட்ட, கன்மக்கடமா வொருபாற் கறுவ உறுதுணையாவாரொருவருமின்றித் தத்துவக் காட்டிலிருந்து தவிக்குந் தம்மைக் கட்கடைவாளாற் காடறமாற்றிப் பாதுகாத்தருளல் வேண்டுமென்று கதறிக் கதறிப் பிரார்த்திப்பார்கள். மனம் வாக்குக் காயங்களுக்கும் வேதங்களுக்கும் எட்டாது சர்வலோக நாயகனாயிருக்கும் இறைவன் தம்மீது வைத்த காருணியத்தால், தாம் ஊனக் கண்களாலும் கண்டு வணங்குமாறு தம்முன் எழுந்தருளியிருக்கும் எளிமையை யெண்ணி யெண்ணி மனமுருகுவார்கள். இறைவனை வணங்காமல் வீணாய்க் கழித்த நாட்களை நினைத்து நினைத்து வருந்துவார்கள். "ஏழைத் தொழும்பனேன் எத்தனையோ காலமெல்லாம் பாழுக்கிறைத்தேன் பரம்பரனைப்பணியாதே" எனவும், "முன்னமேயுன் சேவடிசேரா மூர்க்கனாகிக் கழிந்தனகாலம்." என்றும் சொல்லிச் சொல்லி நைவார்கள்.

(தொடரும்)